தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1936-டிசம்பர் 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் 2. இதழ் 8.

ராஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்ட

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கையசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

அறிவே வேண்டுவோம். (பாட்டு)	
(மு. அண்ணல்தங்கோ)	1
கிராம முன்னேற்றம் (ஈ. வெ. ரா.)	4
மனிதனும் விடுதலையும் (ரயினர் டிபோர்வோட்)	10
அரசியல் சொற்கள்	19
அற்பட்டர் வரலாறு (அ. கிருஷ்ணசாமி)	25
குலகுருவின் திருவிளையாடல் (கதை)	
(ஜே. பி. கிருஷ்ணன்)	31
மதமும் அதன் போதனையும் (கைவல்யம்)	45
புராணமும் தெய்வீகமும் (இங்கர்சால்)	53
கல்யாண விடுதலை (ஈ. வெ. ரா.)	60

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர்.

(குறள்)

மலர் 2. | ஈரோடு 1936. டிசம்பர் 1. | இதழ் 8.

அறிவே வேண்டுவோம்.

(குடியேற்றம்-மு. அண்ணல்தங்கோ.)

"வந்தே மாதரம்" எ. இ. பா.

1. அறிவே! வேண்டுவோம்!—நல்
லறிவே! வேண்டுவோம்! (அறிவே)

2. குறைகளை நீக்கிடும்!
கூர்மையுண்டாக்கிடும்!
"மறை புராணங்க"ளென்னும்
மயக்கத்தைப் போக்கிடும்! (அறிவே)

3. "சைவ" "வைஷ்ணவ" மத
சாதிப்பிரிவுகளால்
நைந்து மடிவதல்லால்
நாடு முன்னேறா தென்று (அறிவே)

4. "கைலை" "வைகுந்த"மும்
காசி ராமேஸ் வரமும்
உய்யவழி தருமென்
றுன்னும் மடமை கெட (அறிவே)

5. "தேவதைகள்" பெயரால்
திக்கற்ற உயிர்களை!
"பாவ" மென்றெண்ணாமலே
பலியிடு வோர்களுக்கு (அறிவே)

6. "மூவர்கள்" "தேவர்கள்"
"முத்தி" யென் றேமாற்றி
யாவற்றையுஞ் சுருட்டும்
யாவரையுந் திருத்தும்! (அறிவே)

7. "இருளன் காட்டேரி காளி
எரிசுடலை மாடன் மாரி
மருள் முனி யாண்டி" யென்று
மயங்கித் திரிபவர்க்கு (அறிவே)

8. பொருளைத் திரட்டிவைத்தும்
புலனை யடக்கிவைத்தும்
அருளறி வறியாது
அலைந்து திரிபவர்க்கு (அறிவே)

9. மனிதனாய்ப் பிறந்திடல்
மாண்பாமெனப் புகன்றும்
மனிதனைத் தள்ளிவைக்கும்
மடமையைச் சுட்டெரிக்கும் (அறிவே)

10. தனிப்பட்டவ ருழைப்பால்
தக்கபயன் கிடைக்கா
தனைவரும் ஒன்றி நின்றால்
அனைத்துங் கைக் கூடுமென்னும் (அறிவே)

11. நிலவுகோ ளிரவியை
நீர் உயிர்த் தன்மையை
மலைகளின் உயர்ச்சியை
வகுத்தறிந்து தெளியும் (அறிவே)

12. உலக வியற்கை தனை
உயிர்க ளமைப் பதனை
பல நில மாண்பதனைப்
பகுத்தறிந்து களிக்கும் (அறிவே)

13. விண்ணின் நிலைதனையும்
வெந்நீத் தன்மையையும்
கண்ணினு மினியதாங்
காற்றினையு மறியும் (அறிவே)

14. எண்ணங்களின் விளைவை!
எண்ணும் உள நிலையைட்!
பெண்ணின் பெருமை தனைப்!
பிறவற்றையு மறியும் (அறிவே)

15. மண்ணிடை யொரு பெண்ணோ
மகனோ மற்றுயிர்களோ
உண்ணாதுயிர் வருந்தி
உடைவதற் கிரங்கு நல் (அறிவே)

மதமும், கடவுளும், அடுத்த ஜென்மமும் ஒழிந்தால் மொழிய இந்தியா பொருளாதாரத்துறை எந்நாளும் சீர்படப் போவதில்லை. அதற்குப் பதிலாக தரித்திரமும், அடிமையும், இழிவும், பஞ்சமும், நோயும் இந்தியாவுக்கு நிரந்தர சொந்தம்.....ஈ. வெ. ராமசாமி.

கிராம முன்னேற்றம்.

கிராமங்கள் அழியவேண்டியதே.

(ஈ. வெ. ரா.)

கிராம முன்னேற்றம் என்றால் நாட்டில் கிராமங்களே இல்லாமல் செய்து விடுவது தான். எனெனில் கிராமம் என் பது ஒருவித வருணாச்சிரமதர்ம முறையில் கீழான ஜாதிக்கு சமமாய் இருப்பது. மேல் ஜாதியானுக்கு உழைத்துப்போட வேண்டியது எப்படி கீழ் ஜாதியானின் கடமையாக இருந்து வருகின்றதோ, அதாவது கீழ்ஜாதியான் ஒப்புக்கொண்டா லும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஜாதி முறையில் கட்டுப் பட்டு இருப்பதின் காரணமாகவே எப்படி கீழ் ஜாதியான் என்பவன் உழைப்பவனாகவும் மேல்ஜாதியான் என்பவன் அவ்வுழைப்பை அனுபவிப்பவனாகவும் தானாகவே இருந்து வர முடிகின்றதோ அதுபோலவே பட்டணங்கள் மேல் ஜாதி யாகவும் கிராமங்கள் கீழ்ஜாதியாகவும் இருந்து வருகின்றன. எப்படி கீழ்ஜாதிக்காக எவ்வளவு தான் பாடுபட்டு அவர்கள் முன்னேற்றத்துக்கு ஆக நாம் எவ்வளவு தான் உழைத்தாலும் அவர்கள் அடியோடு ஜாதி மதத்தை விட்டு விட்டு வேறு மதத்திற்குப்போய்விட்டால் ஒழிய அவர்களது கீழ்ஜாதித் தன்மை ஒழிவதில்லையோ அதுபோல் மேல் ஜா திதித் தன்மையும் ஒழிவதில்லையோ அதுபோலவேதான் கிரா மங்கள் அடியோடு ஒழிந்து கிராமவாசி என்கின்ற மதம் மாறி பட்டணவாசி நகர வாசி என்கின்ற மதக்காரன் ஆனால் ஒழிய கிராமவாசி கஷ்டம் ஒழியப்போவதில்லை.

ஆதலால் கிராம அதிகாரிகளும் ஆரம்ப ஆசிரியர்களும் கிராம முன்னேற்றம் என்னும் துறையில் ஏதாவது உழைக்க வேண்டும் என்கின்ற ஆசை இருந்தால் அவர்கள் கிராமஜனங் களை யெல்லாம் நயத்திலோ பயத்திலோ பட்டணங்கள் நகர ங்கள் ஆகியவைகளுக்குத் துரத்திவிடுவதேயாகும்.

கிராம முன்னேற்றம் என்றால் என்ன? கிராம ஜனங்களுடைய முன்னேற்றம் என்பதேயாகும்.

கிராம ஜனங்கள் முன்னேற்றம் என்றால் என்ன? கிராம ஜனங்களுடைய சவுக்கியமேயாகும்.

கிராம ஜனங்களுடைய சவுக்கியம் என்றால் என்ன? கிராம ஜனங்கள் பட்டணத்தில் உள்ள ஜனங்கள் அடைகின்ற சௌகரியங்களையும் சுகங்களையும் அடையவேண்டும் என்பதாகவே ஆகவேண்டும் அல்லவா?

அப்படிக்கில்லாமல் கிராமத்துக்கு இட்டேரி போட்டு ஒரு கிணறு வெட்டிக்கொடுத்து, ஒரு பள்ளிக்கூடம் கட்டி வைத்து, கம்பு இப்படி விதைக்கிறது, சோளம் இப்படி அறுக்கிறது, விறகு இப்படி உடைக்கிறது, ஆடுமாடு இப்படி மேய்க்கிறது, பால் வெண்ணெய் இப்படி எடுத்து நகரத்துக்காரனுக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போவது, சாணி இப்படி சேகரம் செய்வது, எரு முட்டை இப்படித் தட்டுவது, எர் இப்படி உழுவது, களை இப்படி எடுப்பது, தண்ணீர் இப்படிப் பாய்ச்சுவது, இப்படி அறுப்பது, அறுத்து பட்டணத்தானுக்கு இப்படிக் கொண்டுவந்து சேர்ப்பது என்பன முதலியவைகளை கிராம மக்களுக்குச் சொல்லிக்கொடுத்தால் போதுமா?

அதுபோலவே கைத்தொழில் விஷயத்திலும் இப்படிப் பஞ்சு அரைப்பது, இப்படிப் பஞ்சு கொட்டுவது, இப்படி ராட்டினத்தில் நூல் நூற்பது, இப்படி நூல் கொண்டுவந்து பட்டணத்தில் விற்றுவிட்டு உப்பு, மிளகாய், கடுகு, மிளகு, சீரகம் வாங்கிக்கொண்டு போவது என்பன போன்றவைகளைச்சொல்லிக்கொடுத்தால் போதுமா?

இவற்றால் எல்லாம் கிராமவாசி சினிமா பார்க்க முடியுமா? கல்ல துணி மணி மேல்சட்டை போட முடியுமா? பார்க்கில் உலாவ முடியுமா? அவன் பெண்டு, பிள்ளை S. S. L. C. இல்லாவிட்டாலும் தாய் பாஷையில் கையெழுத்துப்போடவாவது கற்றுக்கொள்ள முடியுமா? அல்லது கிராமவாசிகளுக்கு இந்த உரிமை, மனுவோ "கடவுளோ" பிறவியிலேயே கொடுக்கவில்லையா? சூத்திரன், முதல் மூன்று வருணத்தானுக்கு உழைக்கவே பிறந்தான், சூத்திரன் பணம் வைத்துக்கொண்டிருந்தால் பலாத்காரமாய்

பகுத்தறிவு

மேல்ஜாதிக்காரன் பிடுங்கிக் கொள்ளலாம் என்கின்ற மனுதர்ம சாஸ்திரம் போல் கிராமவாசி பட்டணவாசிக்கு உழைத்துப்போடவே பிறந்தான், கிராமவாசி பணம் வைத்துக் கொண்டிருந்தால், வக்கீலும் வியாபாரியும் லேவாதேவிக்காரனும் "கழுத்தைத் திருகி" பிடுங்கிக்கொள்ளலாம் என்று ஏதாவது கினு சாஸ்திரம் இருக்கிறதா?

கிராம வாசியை மனிதன் என்று இன்று யாராவது மதிக்கிறார்களா? அவர்களின் வாழ்க்கை மிருக வாழ்க்கையை விட வேறு வழியில் மாற்றம் இருக்கிறதா?

இன்று இந்தியாவில் 100-க்கு 8 பேர் படித்து இருக்கிறார்கள் என்றால் அந்த 8-பேர் யார்? கிராமவாசிகளுள்பட வாவிகிதாசாரம்? அவர்களிலும் 100க்கு 8-பேர் படித்து இருக்கிறார்களா? மேல் ஜாதிக்காரர்கள் 100க்கு 100பேர், பட்டண வாசிகள் 100க்கு 50 அல்லது 60 பேர் ஆக இந்தக் கூட்டத்தாரின் எண்ணிக்கைப் பெருக்கத்தால்தான் எல்லா மக்களுக்கும் இந்தியாவில், 100க்கு 8 வீதம் கணக்கு ஆகிறதே தவிர கிராம வாசிகள் 100க்கு 2, 3 பேர் கூட படித்து இருக்கவில்லை.

ஒரு கிராமம் என்றால் ஒரு பணக்காரன் ஆதிக்கமும், மற்ற மக்களை அவன் அடக்கி ஆளுவதும் அந்தப்பணக்காரன் பட்டணத்தான்களுக்கு அடிமையாகி மற்ற கிராம ஜனங்களை அரித்துக்கொண்டுவந்து கொடுப்பதும் என்பதல்லாமல் வேறு என்ன நிலையில் கிராமம் இருக்கிறது என்று பாருங்கள்.

கிராமநிலை குப்பை மேடு, கக்கூஸ் ஜலதாரை நாற்றம், தரித்திரக்குச்சுகள், நோய் உருவங்கள், மூட்டாள்தனமும் மூடநம்பிக்கையும் தாண்டவம் என்பவை போன்றவை அல்லாமல் வேறு என்ன காண முடிகின்றது என்று நீங்களே யோசித்துப்பாருங்கள். நமது நாட்டு வரிகள் முழுவதும் கிராமவாசிகள் உழைப்பையே அஸ்திவாரமாய்க்கொண்டதாகும். அவர்களை நாம் மனுஷ வர்க்கத்தில் சேர்ப்பதில்லை. ஆனால் அவர்களுக்காகவே பாடுபடுகிறோம் என்று வேஷம் போட்டு நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறோம். நமது சுயராஜ்யத்தாலோ, நமது பூரண சுயேச்சையாலோ, சமூக முன்னேற்றத்தாலோ, ராமராஜ்யத்தாலோ கிராம வாசிகளுக்கு ஏற்படும் நன்மை என்ன? இதுவரை ஏற்பட்ட

தென்ன என்று நீங்களே யோசித்துப்பாருங்கள். இந்திய காங்கரஸ் சர்வாதிகாரியான அல்லது சூஸ்தராதாரியான தோழர் காந்தியாரின் கிராம முன்னேற்ற திட்டம் என்ன என்று பாருங்கள்.

"கிராமவாசிகள் பெட்டிகளில் வெள்ளி நாணயம் இருக்கக்கூடாது" என்று காந்தியார் பல தடவை சொல்லி இருக்கிறார்; நெல்லுக்குத்தவேண்டும், கருப்பட்டி காய்ச்ச வேண்டும், ராட்டினம் நூற்க வேண்டும் என்பன போன்ற திட்டங்கள் மூலம் 1000 வருஷத்துக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப்போகச் சொல்லுகிறார். இதனால் கிராமம்தான் ஆகட்டும் கிராம வாசிதான் ஆகட்டும் எப்படி முன்னுக்கு வரமுடியும்? என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். நகரத்தில் பட்டணத்தில் இருக்கிற ஒரு தொழிலாளிக்கோ வீதி கூட்டுபவனுக்கோ உள்ள சவுகரியம், அனுபவம் கிராமந்திரமிராஸ்தாரனுக்கு இல்லை என்றால் நீங்கள் நம்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

யந்திரசாலைத் தொழிலாளிகளைப்பற்றி பிரமாதமாகப் பேசுகிறோம்; அவர்கள் நன்மையே உலக நன்மை என்று பிரசாரம் செய்கிறோம். அவர்களாலேயே உலகம் இருக்கிறது என்று சொல்லுகின்றோம். யந்திரசாலைத் தொழிலாளிகளின் உழைப்பைவிட கிராம வாசிகள் உழைப்பு கொஞ்சமானதா? அல்லது யந்திரசாலைத் தொழிலாளிகளால் நாட்டுக்கு ஏற்படுகின்ற நன்மையைவிட கிராமவாசிகளால் ஏற்படும் நன்மை குறைந்ததா? என்று யோசித்துப்பாருங்கள். ஆனால் அவர்கள் நிலைமையையும் கிராமவாசிகளின் நிலைமையையும் சிறிது ஒத்திட்டுப்பாருங்கள். கிராம வாசிகள் நிலை எவ்வளவு பரிதாபகரமானது என்றுபாருங்கள்.

என்றாலும் ஒரு விஷயத்தில் நான் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். என்னுடைய ஆசை தானாகவே நிறைவேறி வருகிறது அதாவது கிராமங்கள் தானாகவே அழிந்து வருகின்றன. கிராம ஜனங்கள் பட்டணங்களுக்குத் தானாகவே குடி ஏறி வருகிறார்கள். இந்த 25 வருஷத்தில் பழைய கிராமங்கள் ஒன்றுக்கு பகுதி ஆகிவிட்டன. பட்டணங்கள் ஒன்றுக்கு ஒன்றரை இரண்டு பங்கு கூட ஜனப்பெருக்கம் ஆகிப் பெருத்துவிட்டன.

உதாரணமாக இந்த ஈரோட்டை எடுத்துக்கொள்ளுங்கள். 1910-ல் பதினாறு ஆயிரம் ஜனங்கள் ஈரோட்டில் இருந்தார்கள். 1920-ல் 22 ஆயிரம் ஜனங்கள் ஆனார்கள். 1930-ல் 34 ஆயிரம் ஜனங்கள் ஆனார்கள். 1936-ல் இப்போது கிட்டத்தட்ட நாற்பது ஆயிரம் ஜனங்கள் ஆகி இருப்பார்கள்.

இது போலவே நமது ஜில்லாவிலேயே கோயமுத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி முதலிய நகரங்களில் இரட்டிப்பு ஆகிவருகின்றன. இந்த ஜனங்கள் எங்கிருந்து உற்பத்தி ஆனார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம். கிராமங்கள் காலி ஆகிவருகின்றன. கிராமஜனங்களுக்கு பட்டணவாசத்தில் மையல் ஏற்பட்டுவிட்டது. இனி அதைத் தடுக்க யாராலும் ஆகாது என்பதை மனதில் வையுங்கள்.

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைந்தது என்றால் அந்த சமூகத்தில் எப்படி கீழ் ஜாதி என ஜாதி மக்கள் என்பவர்கள் இருக்கக்கூடாதோ அதுபோலவே ஒரு நாடு முன்னேற்றம் அடைந்தது என்றால் அந்த நாட்டில் கிராமங்கள், பட்டிகள், தொட்டிகள் இருக்கக்கூடாது என்பது என் கருத்து. காடெல்லாமே நகரங்களாய் இருக்கவேண்டும். சூரியன், சந்திரன், தென்றல் எப்படி எல்லோருக்கும் பொதுவோ அப்படியே பொதுவாழ்க்கை போக்கியங்கள் எல்லோருக்கும் பொதுவாய் இருக்கவேண்டும்; "பட்டணத்தில் இருப்பதால் மாத்திரம் தான் அனுபவிக்க முடிகின்றது, கிராமத்தில் இருப்பதால் அனுபவிக்க முடிகிறதில்லை" என்கின்ற நிபந்தனை இருக்கக்கூடாது.

சமதர்மம் ஓங்கும் நாடுகளில் கிராமம் என்பதாக ஒன்று இல்லை. வேண்டுமானால் ஒரு நகரத்தில் 25 லக்ஷம் பேர் இருக்கலாம், மற்றொரு நகரத்தில் 250 பேர் இருக்கலாம், பாடும் அனுபவமும் இருவருக்கும் ஒரே மாதிரி தான். இந்த சௌகரியம் செய்ய பொது உடமையோ, சமதர்மமோ, சட்ட மறுப்போ, ஒத்துழையாமையோ, பூரண சுயேச்சையோ தேவை இல்லை; ஜனப்பிரதிநிதிகள் ஜனத்தலைவர்கள் யோக்கியர்களாக இருந்தால் போதும். அவர் அப்படி இல்லாவிட்டாலும் ஆரம்ப ஆசிரியர்களும் கிராம அதிகாரிகளுமாவது இந்த வேலை செய்தால் போதும். இவர்கள் ஒருவரும் செய்யாவிட்டாலும் இயற்கை செய்யப்போகிறது; செய்து

கொண்டு இருக்கிறது. அதை தடுக்காமல் இருந்தாலும் போதும்.

கல்வி.

நமது நாட்டு கல்விக்கு லட்சியமே இல்லை. நமது வாழ்வுக்கே லட்சியமில்லை என்பதோடு சுயநலப்போட்டியுர் பேராசையுமே ஒவ்வொருவருடைய வாழ்க்கையையுர் அடிமைப் படுத்திக்கொண்டிருக்கிறது என்றால் கல்விக்கு என்ன லட்சியம் இருக்கப்போகிறது? என்ன படிப்பது? எதற்கு ஆகப் படிப்பது என்பதை எத்தனை பண்டிதர்கள் கல்வியில் பெரிய பட்டம் பெற்ற மேதாவிகள் உணர்ந்திருக்கிறார்கள்?

ஏதோ படிப்பது, என்னமோவாய்ப்பது, வாய்த்ததைப் பிடித்துக்கொண்டு சப்புச் சப்பென்று சப்பி அரை உயிரை வாங்கி கடைசியில் "ஓய்வு" எடுத்துச்சாவது என்பதல்லாமல் இன்றைய கல்விக்கு என்ன லட்சியமோ, மண்ணாங்கட்டியோ பயனோ இருக்கிறது என்று யோசித்துப்பாருங்கள்.

எல்லா மக்களுக்குர் கல்வி பரவுவது நர் நாட்டில் பொதுவுடமைக் கொள்கை பரப்புவது போன்ற அவ்வளவு கஷ்டமான காரியமாய் இருக்கிறது.

"எல்லோருக்கும் உள்ள சொத்துக்களை சரியாய் பங்கு போட்டுவிட்டால் அப்புறம் பணக்காரன் ஏழை இருக்கவே மாட்டானே, உலகர் ஒழுங்காய் நடவாதே" என்று சொல்லுகின்ற வாதம் தான் இன்று கல்விக்கும் ரகசியத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. எனென்றால் "எல்லாரும் படித்துவிட்டால் பிறகு முட்டாள் யார், புத்திசாலி யார் என்கின்ற பேதமே இல்லாமல் போய்விடுமே, படித்தால் பாடுபடாமல் வாழ்க்கை நடத்துர் சவுகரியமும் போய்விடுமே" என்று கருதியே கல்வியை இந்த நாட்டில் இவ்வளவு மோசமாக்கி விட்டார்கள். மேல் நாடுகளில் கல்விக்கு இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் கிடையாது; யாவருக்கும் ஒரு அளவு கல்வி சுதந்திரமாய் நிர்ப்பந்தமாய் வினியோகிக்கப்படுகிறது.

மற்றும் இங்கு கல்வி பிழைப்பிற்கு வழியே தவிர அறிவுக்கு வழியல்ல என்கின்ற தன்மையில் வந்துவிட்டதால் கல்வி இவ்வளவு பூஜ்ஜியமாகப் போய்விட்டது. ஆதலால் எல்லா மக்களுக்கும் கல்வி பரவ வேண்டுமானால் கிராமங்

மனிதனும், விடுதலையும்.

அத்தியாயம் I.

மனிதனும், பிராணியும்.

(அக்டோபர் மாத இதழில் வெளிவந்த கட்டுரையின் பிற்பகுதி)

ஆதியில், உருவத்தில் மிகவும் சிறியதாயிருந்த குதிரை, 3,000,000 வருஷங்களுக்குப் பிறகு தற்கால உருவத்தையடைந்தது. எனவே மனிதனும் லக்ஷோபி லக்ஷம் வருஷங்களுக்குப் பிறகே தற்கால வடிவை அடைந்திருக்க வேண்டும். நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணியாயிருந்த மனிதன் 9,000,000 வருஷங்களுக்குப் பிறகுதான் நாற்கால் பிராணி தசையை அடைந்தான். அப்பால் வெகு காலத்துக்குப் பிறகு அவன் இரு கால் பிராணியானான். மனிதன் சிற்றுருவாயிருந்த காலத்திய எலும்புகளோ மண்டையோடுகளோ நமக்கு இதுகாறும் கிடைக்கவில்லை. எனினும் இப்பொழுது ஆபிரிக்காவில் ஒரு மாதிரிக் குள்ளர்கள் இருந்துதான் வருகிறார்கள்.

களை ஒழித்தாலே போதுமானது. பட்டண வாழ்க்கையே ஒருவிதமான கல்வி ஸ்தாபனம் என்று சொல்லலாம். கிராம வாழ்க்கையே ஒருவிதமான மௌடீக ஸ்தாபனம் என்றும் சொல்லலாம்.

பட்டண வாசம் அறியாமையைப் போக்குவது மாத்திரமல்லாமல் ஏழ்மையையும் போக்கும், நோயையும் கூடபோக்கும் என்று சொல்லலாம்.

ஆகவே மக்களின் இன்றைய பெருவாரியான குறைகளுக்கு கிராம வாசம் ஒரு காரணமாகும் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

(31—10—36-ந் தேதியில் நடந்த ஈரோடு கிராம உத்தியோகஸ்தர்கள் பயிற்சிசாலையின் 6 வது ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்த தோழர் ஈ. வெ. ரா.வின் சொற்பொழிவு.)

டிரிஸ்பிதாமி மலைப் பிரதேசங்களில் ஒரு மாதிரிக் குள்ளர்கள் இருந்து வருவதாக பிளினி எழுதியிருக்கிறார். அவர்களுடைய உயரம் 27 அங்குலமாம். அவர்கள் மிகவும் அழகானவர்கள் என்றும் 8 வருஷங்களுக்கு மேல் அவர்கள் ஜீவித்திருப்பதில்லை யென்றும் வேறொரு ஆசிரியர் கூறுகிறார். அக்குள்ளர்கள் கொக்குகளுடனும் ஆடுகளுடனும் சண்டை போட்டதாகவும் கடல் துறைகளுக்குத் தீர்த்தமாடச் சென்றதாகவும் ஹோமர் காவியங்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்வண்ணம் அவர்கள் கடலாடச் சென்றதினாலேயே இதர நாடுகளுக்கு அவர்கள் சென்றிருக்க வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள டென்னிசி மாகாணத்தில் 1866-ல் மூன்று இடங்களில் எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டன. அவைகளின் உயரம் 19 அங்குலமே. பற்களினால் அந்த எலும்புக் கூடுகள் வயது முதிர்ந்தவர்களின் எலும்புக் கூடுகள் என யூகிக்கப்பட்டன. அந்த எலும்புக் கூடுகள் இப்பொழுது நாஷ்வில் சர்க்கார் நூல் நிலையத்தில் இருந்து வருகின்றன. மிகச் சமீப காலத்தில் ஆர்க்கன்சாஸ் மாகாணத்தில் சில எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவைகளின் உயரம் 18 அங்குலமே. வெயிலும் காற்றும் பட்டு அவை தூளாய்ப் போயின. அவ்வாறு அவை அழிந்து போயிருக்கா விட்டால் மானிதன் தோன்றிய காலத்தை நிர்ணயம் செய்வதற்கு அவை உதவிபுரிந்திருக்கக்கூடும்.

நமது முன்னோர் கூறும் காளி கூளிக் கதைகளில் ஓரளவு உண்மையிருக்குமென்றே தோற்றுகிறது. பரிணாம வேலை நெடுநாளாக நடைபெற்று வருகிறது. 2000 வருஷங்களுக்கு முன் பிரபஞ்சம் எந்நிலையில் இருந்ததென நமக்கு ஊகிக்கவும் கூட முடியாது. நம்மவர்களில் பெரும்பாலார் நமது சுற்றுச் சார்புகளுக்கு அப்பால் நோக்குவதில்லை. நமது உள்ளத்திலும் உடலிலும் காலத்தின் குறிகள் பதிந்திருந்தாலும் அவைகளை நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை.

ஊர்வன ஒழிந்து போனதற்கு ஆதிகால மானிதனே காரணமாயிருந்திருக்க வேண்டும். அவை மறைந்துபோன கதை இப்பொழுதும் பெரிய மர்மமாகவே இருக்கிறது. கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்களினாலோ பிரளயத்தினாலோ அவை ஒழிந்துபோயின வெனச் சிலர் கூறுகிறார்கள். அனேகமாக ஆதிகாலத்திய முலையுண்ணும் பிராணிகளும் குள்ளமானிதரும் ஊரும் பிராணிகளின் முட்டைகளை அழித்திருக்க வேண்டும்.

ஆதிகாலக் குள்ளர்களின் எலும்புக் கூடுகள் இப்பொழுது காணப்படவில்லை. அதற்குக் காரணம் எதுவாயிருக்கலாம். ஒன்றில் ஆதிகாலக் குள்ளர்கள் இறந்தவர்களைத் தின்றிருக்க வேண்டும்; அல்லது அவர்களது எலும்புக் கூடுகள் வலியற்றவை களாயிருந்து அழிந்து போயிருக்க வேண்டும். ஆதிகாலக் குள் ளர்கள் 8 வருஷங்களுக்கு மேல் உயிர் வாழாது இருந்திருந்தால் அவர்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் அதற்குக் குறைவான ஆயு ளுடையவர்களாகவே இருந்திருக்க வேண்டும். ஆகவே அவர் களுடைய எலும்புக் கூடுகள் அழியாதிருக்க நேரவில்லை. மனிதனுடைய ஆயுள் நீண்ட பிறகே அவனது எலும்புக் கூடும் உரம் பெற்றிருக்க வேண்டும். ஜாவா தீவில் வாழ்ந்த மக்கள் நான்கு அல்லது 5 லக்ஷம் வருஷங்களுக்கு முன் நீடித்த ஆயு ளுடையவராயினர் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

குள்ளமான இருகால் பிராணியாயிருந்த மனிதன் அக்கா லத்து சுவனைக்காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு பாடுபட்டிருப் பான் எப்படி சிந்தனா சக்தியுடையவர்களுக்கு யூகித்து அறிந்துகொள்ள முடியும். மிகவும் வருஷங்களில் சிறுகச் சிறுகவே அவனுடைய ஆயுள் நீட்சி பெற்றிருக்கவேண் டும். உடலும் உள்ளமும் விருத்தியடைந்த பிறகு மனிதன் மற்ற பிராணிகளுக்கெல்லாம் உயர்ந்தவனாக மதிக்கப்பட்டிருக் கவேண்டும். அக்காலத்து, பிறவுயிர்களைக் கொல்லுவதும் தின்பதுமே சுகமான விருத்தி செய்வதுமே மனிதனுடைய முக் கிய வேலையாக இருந்திருக்கவேண்டும். அந்தக் குணம் இப் பொழுதும் கம்மிடம் இருந்துதான் வருகிறது. வேட்டையாடு வதற்காகப் பலர் ஆபிரிக்கக்காடுகளுக்குச் செல்வதை நாம் இப் பொழுதும் பார்க்கிறோம். வேட்டையாடுவோர் தாம் கொன்ற பிராணிகளின் எண்ணிக்கை அதிகமாயிருந்தால் அதைப்பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள். சிற்றுயிர்கள் ஒழிக்கப் பட்டுக்கொண்டே வருகின்றன. தற்காலப் பெண்கள் தோல் கனை ஏணை யாக அணிவதில் பிரியமுடையவர்களாயிருக்கிறார் கள். மனிதனோ சாக பட்சணியாகவும் மாமிச பட்சணியாக வும் இருக்கிறான். மாமிசத்தின் மீது நாக்கிருக்கும் அவர் நமது காட்டாளர் முன்னோரிடமிருந்து பெற்ற குணமாகும். மாமிசமுண்டு நாம் பழக்கம் பெற்று விட்டதினால் நம்முடைய உயிருக்காக எத்தனை உயிர்கள் பிரதிதினமும் கொல்லப்படு கின்றன எப்படி நாம் உணர்வதில்லை.

ஆதிகாலம் முதற்கொண்டே மனிதனுக்கும் நாய், பூனை, ஆடு, மாடு முதலிய பிராணிகளுக்கும் நெருங்கிய சம்பந்தம்

இருந்து வந்திருக்கிறது. எகிப்தியர் பூனைகளைப் புனிதமாக மதித்து வந்திருக்கிறார்கள். இறந்து போன பூனைகளைத் தலைமாட்டிச் சேமித்து வைத்திருக்கிறார்கள். ஆதிகால மக்களுக்கும் பூனைகளுக்கும் மிக்க உறவு இருந்து வந்திருக்கிறது. பறவைகளையும் எலிகளையும் தின்று மனிதன் வாழ்ந்த காலத்துப் பூனைகள் மனிதனுக்கு மிக்க உதவியாக இருந்திருக்க வேண்டும்.

தற்கால உயிருக்கும் 30 லக்ஷம் வருஷங்களுக்கு முந்திய உயிருக்கும் மனிதனுக்கும் நடுவுக்குமுள்ள வித்தியாசம் இருந்திருக்கவேண்டும் என்பது நிச்சயம். சுய சேஷமத்தைக் குறித்து சில பிராணிகளும் மனிதரும் மிக அந்நியோன்னியமாக வாழ்ந்திருக்கவேண்டும். ஆகவே உயிர்ப்பாதுகாப்புக்கு உதவி புரிந்த பிராணிகள் எல்லாம் புனிதமாகக் கருதப்பட்டனை. இவ்வண்ணமே தெய்வங்களும் உருவாயின. மனிதனுடைய மனோசக்தி காலக்கிரமத்தில் விருத்தியடைந்தது; கற்பனா சக்தியும் வளர்ந்தது. எனவே பாவற்றிற்கும் கடவுளே மூலமென எண்ணலானான். கடவுளுக்குப் பூஜை போடுவதினால் நமது விருப்பங்களைப் பூர்த்தி செய்யலாமென்றும் அவன் நம்பலானான்.

அத்தியாயம். II.

மனிதனும் கடவுள் உணர்ச்சியும்.

மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே கடவுள் உணர்ச்சியும் விருத்தியடைந்து கொண்டே வந்திருக்கிறது. மனிதத் தோற்றத்தைப்பற்றிய கொள்கைகள் மிகச் சமீப காலத்தில் ஏற்பட்டவை. பூகர்ப்ப சாஸ்திரமும் பூமியின் ஆயுளை வரையறுக்கும் சாஸ்திரமும் தோன்றிய பிறகே மனிதத் தோற்றத்தைப்பற்றிய ஆராய்ச்சிகள் தோன்றலாயின. பூகர்ப்ப சாஸ்திரத்தையோ பூமியின் ஆயுளை வரையறுக்கும் சாஸ்திரத்தையோ நமது முன்னோர்கள் அறியவே அறியார்கள். எனவே மக்கள் உற்பத்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்யவோ கடவுள் உற்பத்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்யவோ தமது சுயபுத்தியை தம்மிஷ்டப்படி உபயோகித்துக்கொள்ள மக்களுக்கு உரிமையுண்டு. ஏனெனில் கடவுள் தோற்றத்தைப்பற்றியோ மக்கள் தோற்றத்தைப்பற்றியோ மக்களுக்கு இது காறும் ஒன்றுமே தெரியாது.

பழைய சரித்திர வரலாறுகளை அறியவேண்டுமானால் எகிப்திய, சால்டிய சரித்திரங்களையே நாம் ஆராயவேண்டிய

காக இருக்கிறது. எகிப்திய சால்டிய சரித்திரங்கள் 10,000 வருஷங்களுக்கு முற்பட்டவை. 30 லக்ஷம் வருஷங்களுக்குமுன் தோன்றியதாக நம்பப்படும் மனிதனுடைய சரித்திரத்தையும் எகிப்திய, சால்டிய சரித்திரங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அச் சரித்திரங்கள் நேற்றையச் சரித்திரங்கள் போலவே தோன்றா நிற்கும்.

பாபிலேயன் நகரவாசியான ஒரு சால்டியப் பூசாரி கிரேக்க பாஷையில் 9 நூல்கள் எழுதினார். அதற்குத் தேவையான தகவல்கள் பேலூஸ் ஆலய நிலவறையிலிருந்து அவருக்குக் கிடைத்தனவாம். அந்தப் புத்தகங்கள் இப்பொழுது அழிந்து போய் விட்டன. அவைகளில் சில பகுதி மட்டுமே ஜோஸபஸ், ஈசிபியஸ் முதலியோர் கட்டுரைகள் மூலம் நமக்குக் கிடைத் திருக்கின்றன. அவை 432,000 வருஷ சரித்திரத்தைப்பற்றி யவை. அக்காலங்களில் தேவர்களும் தேவாம்சம் பெற்றவர் களும் உலகத்தை ஆண்டார்களாம். பாரசீக குடாக்கடலி லிருந்து மச்சாவதாரமாகத் தோன்றிய ஓனஸ் என்பார் சரித் திரமும் அக்கதைகளில் அடங்கியுள்ளது.

பிரபஞ்ச சிருஷ்டியைப்பற்றி பேரோஸஸ் கூறியிருப்பதா வது:—

ஆதியிலே எங்கும் இருள்மயமாயும் ஜலமயமாயுமிருந்தது. அக்காலத்து விகாரரூபமுடைய பல பயங்கரப்பிராணிகள் தோன்றின. இரண்டு, நான்கு சிறகுகளுடைய மனிதர்களும் இரண்டு முகங்களும், இரண்டு தலைகளும் உடைய மனிதர் களும் ஆணும் பெண்ணும் கலந்த அர்த்தநாரீசுரர்களும், கொம் புடைய மனிதர்களும் குதிரைக் குளம்புடைய மனிதர்களும் மனித உடலும் குதிரைக்கால்களும் உடைய மனிதர்களும் மனிதத்தலையுடைய எருதுகளும் நான்கு உடல்களும் மீன் வாலும் உடைய நாய்களும் பலவகைப்பட்ட மிருகங்களின் வடி வம் பொருந்திய பிராணிகளும் அக்காலத்துத் தோன்றினவாம். மற்றும் பல்வித பயங்கரமான மீன்களும் புழுக்களும் சர்ப்பங் களும் அக்காலத்தில் இருந்தனவாம். பேலஸ் ஆலயத்தில் அவைகளின் சித்திரங்கள் இப்பொழுதும் இருந்து வருகின் றன.

அத்தகைய பிராணிகள் எப்பொழுதாவது இருந்தனவா! அல்லது மிருகங்களுக்குள் ஊர்வனவற்றிற்குப் பயந்திருந்ததாக்

களின் மனப்பிராந்தியால் ஏற்பட்ட கற்பனைகளா? இம்மாதிரிப்பிராணிகளைப்பற்றி அவர்கள் கனவு கண்டிருக்கலாம். அக்கனவுகளை அவர்கள் பிறரிடம் சொன்னபோது அவர்கள் நம்பியிருக்கலாம். "சால்டியாவிலே மிருகங்களுக்கு ஒப்பான ஒரு கூட்டம் மக்கள் வசித்து வந்தார்கள்" என்று பெரோஸசும் எழுதி வைத்திருக்கிறார். வாஸ்தவத்தில் அவர்கள் மிருகதசையிலேயே இருந்திருக்க வேண்டும்; பலவிதத்தோற்றமுடையவர்களாயும் இருந்திருக்க வேண்டும்.

பிரளயத்தைப்பற்றி பைபிலில் கூறப்பட்டிருப்பதும் சால்டிய சரித்திரங்கள் கூறும் வரலாறும் ஒன்றுபோலவே இருக்கின்றன. பெரோஸஸ் எழுதிய நூல்கள் புராணக்கதைகளாகவே மதிக்கப்படுகின்றன. ஆகவே பேரோஸஸ் வரலாற்றைத் தழுவிய பைபில் பிரளய வரலாற்றை நாம் எவ்வாறு உண்மை என நம்புவது?

சிருஷ்டியைப்பற்றிய காலம் இப்பொழுதும் விவாதத்துக்கு இடமாகவே இருந்துவருகிறது. கி. மு. 3671-க்கு முன் உலகம் சிருஷ்டிக்கப்பட்டதாக யூகப் பூசாரிகள் கூறுகிறார்கள். கி-மு-5509-க்கு முன் உலகம் சிருஷ்டிக்கப்பட்டதாக கிரேக்கர்களும் அர்மீனியர்களும் நம்புகிறார்கள். 17-வது நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ஞானி, கி-மு- 4004 அக்டோபர் 26ந்தேதி காலை 9-மணிக்கு உலகம் சிருஷ்டிக்கப்பட்டதாக வெகு திட்டமாக எழுதி வைத்திருக்கிறார். ஏதாவது ஒரு காலத்திற்றான் உலகம் தோன்றியிருக்க வேண்டுமென்று நம்புகிறவர்கள் பைபில் வரலாற்றையே உண்மையென மதிப்பார்கள். பூமியின் தோற்றத்தைப்பற்றி பண்டைக்கால மக்கள் எதுவும் அறியாதிருந்ததினால் பைபில் வரலாற்றை உண்மையென நம்பிக்கொண்டார்கள்.

மக்கள் மனத்திலே பலவிதமான கற்பனைகளும் கனவுகளும் தோன்றுவதற்குப் பயமே காரணம். இயற்கைத் தோற்றத்தின் காரணங்களை அறியாத அவர்கள் மனத்திலே சதா பயமே குடிகொண்டிருந்தது. தம்மை விட மேலான—பலம் பொருந்திய ஏதோ ஒன்று இருப்பதாகவும் அதுவே உலகத்தை ஆட்டி வைக்கிறதென்றும் நம்பினார்கள்.

நாமரூபமுடைய ஒரு கடவுள் இருப்பதாக மக்கள் கொண்ட நம்பிக்கையின் காரணம் இப்பொழுதும் மர்மமாகவே

இருக்கிறது. தன் சாயலிலே கடவுள் மனிதனை சிருஷ்டித் தான் என்ற எண்ணமே மனிதனுடைய அகம்பாவத்துக்குக் காரணம்; அதனாலே சிலர் தாமே தெய்வமென்று கூட எண் ணிக்கொள்கிறார்கள்! பிறர் தன்னை வணங்க வேண்டுமென் றும் கூறுகிறார்கள்.

தற்கால நம்பிக்கைகள் அழியாமலே இருந்து கொண்டு இருக்கும் எனக் கூறுவது வெறும் கற்பனையே. பழைய நம் பிக்கைகள் மறைந்து போனது போலவே தற்கால நம்பிக்கை களும் மறைந்து போகும். இப்பொழுது தெய்வீகமாகத் தோற் றப்படுகிறவைகள் எல்லாம் இயற்கை சக்திக்கு உட்பட்டவை களே. இயற்கை சக்திகளை வழிப்படுத்த மனிதன் முயன்று கொண்டே இருக்கிறான். தன் கருத்துக்களை தாராளமாக வெளியிடும் அளவுக்கு மனிதன் இன்னும் சுதந்தரம்பெறவில்லை. தன் கருத்துக்களை பெல்லாம் அப்படியே வெளியிட்டால் சமூ கப்புரட்சி உண்டாகுமோ என்று இப்பொழுது மனிதன் அஞ் சிக்கொண்டே இருக்கிறான். ஒழுங்கான மனப்பான்மையு டைய மக்கள் மிகச் சொற்பமே. சென்ற நூறாண்டு காலத் தில் நாகரிகம் பெருகி வருவது உண்மையானாலும் குருட்டு நம் பிக்கையுடையவர்கள் இன்னும் அதிகமாகத்தான் இருக்கிறார் கள். குருட்டு நம்பிக்கைகளினும் கற்பனைகளினுமிருந்து மனி தன் ஒருபொழுதும் விடுதலையடையவே மாட்டான். பிறர் சொல்வதை நம்பாமல் தானாகச் சிறிது ஆராய்ச்சி செய்து உண்மை காண வேண்டுமென்ற உணர்ச்சி விருத்தியாகும் வரை மனிதன் பூரண விடுதலையடையவேமாட்டான்.

நாம் கேட்பவை எல்லாம் உண்மையென நம்பி விடுகிறோம்; உண்மை காணும் வசதிகள் நமது முன்னோர்களுக்கு இருந்த தில்லை யென்பதையும் மறந்து விடுகிறோம். நமது விருப்பத் துக்குப் பொருந்துவனவெல்லாம் உண்மையென நம்புவது சோம்பேறித்தனமாகும். நமது முன்னோர் பழங்கதைகளை யெல்லாம் நாம் உண்மையென நம்பிக்கொண்டு இருந்தால் நாம் ஒரு பொழுதும் முன்னேற்றமடையவே மாட்டோம். நமது முன்னோர் அனுபவித்த கஷ்டங்களை நாமும் அனுபவிக்க விரும்புவதில்லை. அப்படியிருக்க அவர்களது குருட்டு நம்பிக் கைகளை மட்டும் நாமும் ஏன் நம்பவேண்டும்? மனோகற்பித மான நம்பிக்கைகள் அறிவு விளக்கம் பெறும்போது ஒழிந்து விடுவது நிச்சயம்.

பண்டைக்கால உணர்ச்சிகள், நம்பிக்கைகள் முதலியவை களின் சாயல் இப்பொழுதும் நமது மூளையில் இருந்தே வரு கின்றன. இதை டாக்டர்களும் உடல்நூல் வல்லாரும் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.

அறிவு வளர்ச்சிக்கு இப்பொழுது மிக வசதிகள் ஏற்பட்டி ருப்பதினால் மனிதன் தன் அறிவை விருத்தி செய்து ஆராய்ச்சி கள் நடத்தி மக்களை அடக்கியாளும் சக்தி எதுவுமில்லையென உணர்ந்து வருகிறான். யாவற்றிற்கும் கடவுளே காரணமென நாம் நம்புகிறோம். நாம் ஒவ்வொருவரும் தனித்தனி சில காரி யங்கள் செய்ய சக்தியுடையவர்களாயிருப்பதினால் உலக சிருஷ் டிக்கும் ஒரு பெரிய சக்தி காரணமாயிருக்க வேண்டும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம். கடவுள் என்ற வார்த்தைக் கே பொருள் இல்லை. கோடிக்கணக்கான மக்களையும் உள் ளங்களையும் கிரகங்களையும் ஒன்று அடக்கியாளுவதாக நம்பு வதே அசம்பாவிதமானது.

பிரபஞ்சத்தை அடக்கியாளும் ஒரு கூட சக்தி இருந்து வரு வதை நாம் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். ஆனால் அந்த சக்திக்கு நாமமும் ரூபமும் கற்பிப்பது புத்திசாலித்தனமே யாகாது. கடவுள் பயமே மக்களின் துன்பங்களுக்கெல்லாம் காரணம். கடவுள் பெயரைச் சொல்லியே பூசாரிகளும் மத குருமாரும் இப்பொழுது வயிற்றை நிரப்பி வருகிறார்கள்.

கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்கு நித்திய வாழ்வு கிடைக்குமென்று மதாசாரியர்கள் கூறுகிறார்கள். மண்ணுல கத்திலே துன்பங்கள் அநுபவிக்கும் மனிதன் எதற்காக நித்திய வாழ்க்கையை விரும்புகிறானோ தெரியவில்லை. ஆத்ம நம்பிக் கையும் ஒரு கற்பனையே. ஆத்மா உண்டென எகிப்தியர்களே முதன் முதலில் கூறினார்கள். அந்த நம்பிக்கை இன்னும் ஒழியவில்லை. உடல் மரணமடைவதோடு எல்லாம் நாஸ்தி யாகி விடுகிறது. மரணத்துக்குப் பின் எதுவும் மீதமாகப் போவ தில்லை.

மத நம்பிக்கை யில்லாதவர்களுக்கும் மிருகங்களுக்கும் மோட்ச வாழ்வு இல்லையென்று மத வாதிகள் கூறுகிறார்கள். எல்லா மக்களும் ஒரே மாதிரியாகவே உற்பத்தியாகியிருக்கிறார் கள். விருத்தியடைந்திருக்கிறார்கள். ஆகவே ஒரு கூட்டத் தாருக்கு மட்டும் மோட்ச வாழ்வுண்டென்றும் மற்றவர் களுக்கு இல்லையென்றும் கூறுவது யுக்தி வாதத்துக்குப் பொ

ருத்தமானதா? மிருகங்களுக்கு ஆத்மாவில்லை யென்று எப்படிக் கூறுவது? அனேக பிராணிகளுக்கு மனோசக்தி யிருக்கிறது. புழுக்களுக்கும் கூட மனோசக்தி யிருப்பதாக ருசுப்பித்தப்பட்டிருக்கிறது.

உண்மையை ஆராய்ந்தறிவது கஷ்டமாயிருப்பதினால் பலர் பழங் கதைகளை யெல்லாம் அப்படியே நம்பிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் நம்புகிறபடி நடப்பதுமில்லை.

பரிணாமக் கொள்கை வலுப்பெற்ற பிறகு பழங் கதைகள் எல்லாம் அழியத் தொடங்கிவிட்டன. மனிதன் கடவுள் சிருஷ்டியல்லவென்பதை எல்லாரும் உணர்ந்துவிட்டார்கள். சிற்றுயிராயிருந்து விருத்தியடைந்தவனே மனிதன் என எல்லாரும் இப்பொழுது ஒப்புக்கொள்கிறார்கள். மனிதனது மனோசக்தியும் சதா வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது. நேற்றிருந்த நிலைமையில் நாம் இன்று இல்லை. பழங் கதைகளும் பழக்க வழக்கங்களும் மனோசக்திக்கு மூட்டுக்கட்டை போடாமலிருக்குமானால் அது கொஞ்சம் கூட விரைவாக வளர்ச்சியடைந்திருக்கும். பயனற்ற கொள்கைகள், நம்பிக்கைகளிலிருந்து நாம் விடுதலையடைய வேண்டும். மோட்ச நரகங்களைப்பற்றி நாம் சிந்தனை செய்யவே கூடாது. நமது வாழ்நாளோ மிகக் குறுகியது. அந்தச் சொற்ப காலத்திலே சிலர் சுகம் அநுபவிக்கிறார்கள். பலர் துன்பம் அநுபவிக்கிறார்கள். சுயநலத்தை ஒழித்து சேவை செய்ய ஒருப்பட்டால்நாம் இம்மண்ணுலகத்தையே பொன்னுலகமாக்கி விடலாம்.

தற்காப்புணர்ச்சியின் படியே சுயநலம். தற்காப்புணர்ச்சி இயற்கை விதி. தற்காலத்திலே அவ்வுணர்ச்சி மிகவும் மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு நமது தற்கால கல்வித் திட்டமே காரணம். கல்வித் திட்டம் போட்டியை மூட்டி வருகிறது. ஒவ்வொருவனும் பிறரைத் தோற்கடித்து வெற்றி பெற விரும்புகிறான். தனி நபர்களிடம் காணப்படும் இந்த சுயநல உணர்ச்சி கடைசியில் தேசிய உணர்ச்சியாக—தேசங்களின் உணர்ச்சியாக பரிணமித்து விடுகிறது. ஆகவே யுத்தங்கள் உண்டாகின்றன.

காண முடியாத ஒரு கடவுளிடம் நம்பிக்கை வைப்பதும் சுயநலத்தைப் பொறுத்தே. ஆகவே அந்நம்பிக்கை ஒழிய வேண்டும்.

Political terms.

அரசியல் சொற்கள்.

Amnesty. ஆம்நிஸ்ட்டி.

குற்றம் செய்ததாகக் கருதப்பட்டவர் மேல் குற்றச் சாட்டு வழக்குத் தொடராமலும் அவருக்குத் தண்டனை ஏதும் விதிக்காமலும் அவரை நிபந்தனை இன்றி மன்னித்து விட்டு விடுவதாகச் சொல்லும் கவர்ன்மெண்ட் உத்தரவு. (இந்த வார்த்தை சிறப்பாக அரசியல் சம்மந்தமான குற்றவாளிகளுக்கு அளிக்கும் மன்னிப்புக்கே பயன்படுத்தப்படுகிறது)

Autocracy. ஆட்டோகிரசி.

வரை அறை இல்லாமல் தன் இச்சையாய் அதிகாரத்தைச்

குருட்டு நம்பிக்கைகளும் மத பக்தியும் இப்பொழுது நாளுக்கு நாள் குறைந்து வருவது கண்கூடு. மதாச்சாரியார்கள்கூட இப்பொழுது சந்தேகிகளாகி விட்டார்கள். ஆகவே மதஸ்தாபனங்கள் எல்லாம் வெகு சீக்கிரத்தில் சமூகஸ்தாபனங்கள் ஆகப்போவது உறுதி. ஒழுக்கத்துக்கு அடிப்படை பரிணாமமேயன்றி மதங்கள் அல்ல. பெரும்பாலாருக்குப் பெரும்பான்மையான நன்மையளிக்கக்கூடியதே சிறந்தது. அதுவே கடைசியில் வெற்றி பெறப்போகிறது. இக்கொள்கை வெற்றி பெறாவிட்டால் உலகத்திலே அராஜகம் எற்பட்டு அழிவது திண்ணம்.

பிரார்த்தனையினால் உயிருக்குப் பாதுகாப்பு ஏற்படாது. இயற்கை சக்திகளை அடக்கியாளுவதினாலேயே பாதுகாப்பு ஏற்படும்.

குருட்டு நம்பிக்கை அறிவுக்கு அடிமைப்பட்டு வருகிறது. மனிதன் சுயமாகச் சிந்தனை செய்யத்தொடங்கினால் விடுதலை பெறுவான். அறிவும், உண்மையும், நீதியும் வெற்றிபெறும்.

செலுத்திக்கொண்டிருக்கும் அரசியல் ஆட்சிக்கு இடப்பட்ட பெயர்.

Bicameral system. பைகமரல் சிஸ்ட்டம்.

எந்த ஒரு அரசாங்கத்தின் நடைமுறைக்கு இரண்டு சட்டசபைகளும் அந்த இரண்டு சட்டசபைகளின் ஏகோபித்த சட்ட நடவடிக்கையும் வேண்டியதாக இருக்கின்றனவோ அத்தகைய அரசாங்கத்திற்குச் சொல்லும் வார்த்தை. (அதாவது இந்தியா ஆட்சிக்கு இருந்துவரும் சட்டசபை போன்றது.)

Bloc. பிளாக்.

சட்டசபை மெம்பர்களின் ஒரு குறிப்பிட்ட கூட்டமாவது அல்லது பல கட்சிகளையும் சேர்ந்த அரசியல் வாதிகளின் ஒரு கூட்டமாவது எதேனும் ஒரு திட்டத்தை ஆதரிக்க ஒருமனமாய் ஒன்று சேர்ந்தால்—அல்லது ஒரு மந்திரி சபையை ஆதரிக்க வேண்டுமென்றாவது ஒன்று சேர்ந்து நின்றால்—அப்படிப்பட்ட கூட்டத்தைக் குறிப்பிடும் வார்த்தை.

Bolshevism. போல்ஷ்விசம்.

சொத்துள்ள வகுப்புக்கும் பாட்டாளி வகுப்புக்கும் எந்தக் காலத்திலும், பகையன்றி ராசி ஏற்பட முடியாது என்ற தத்துவத்தை வெளியிடுகின்ற வார்த்தை. அதன் அர்த்தத்தை மேலும் விவரிப்போமாகில், அது இந்த 2 வகுப்புகளும் ஒன்றோடொன்று போர் செய்துதான் தீருமென்றும்— அப்படிப்பட்ட போர் இன்றியமையாததென்றும் தெரிவிப்பதோடு, அது உழைப்பாளிகள் தவிர வேறு எந்த வகுப்பாருமே ஒரு நாட்டில் இருக்கக்கூடாதென்றும், வேறான வகுப்பாரையெல்லாம் அழித்து ஒழித்துத் தீர்க்கவே வேண்டுமென்றும், உழைப்பாளி வகுப்பாரால் உழைப்பாளிகளின் நன்மைக்கே பொது உடைமைத் திட்டத்தின்படி ராஜாங்கம் நடைபெற வேண்டுமென்றும் பொருளுடையதாகும்.

Bolshevik. போல்ஷ்விக்.

ரஷ்யாவில் 1917-ம் ஆண்டில் புரட்சி நடந்து முடிந்தபிற்பாடு, அந்நாட்டை ஆட்சி செலுத்த வந்த ருஷ்ய தீவிர சமதர்மக் கட்சியின் அங்கத்தவரைக் குறிப்பிடும் சொல். (பொதுவாக மெஜாரிட்டி கூட்டத்திற்கு பயன்படுத்துவது)

Bureaucracy. புராக்கரசி.

ஜனங்களுக்கு ஜவாப்பு சொல்லாமல் எல்லா இலாக்காக்களையும் சில அதிபதிகளே ஆண்டு கொண்டு தயவு தாட்சண்யம் காட்டாமலும், தன் பழைய மாமூலை விடாமலும், கடமையை தீர்த்திடுவது என்ற முறையில்மட்டும் தன் அரசியல் வேலைகளைச் செய்வதும் ஆகிய கொள்கைகளின் படி நடக்கும் அரசாங்க அமைப்புக்குப் பெயர். (பொதுவாக அரசியல் அதிகார வர்க்கத்துக்குப் பயன்படுத்துவது)

Civil Disobedience. சிவில் டிஸ் ஒபீடியன்ஸ்.

ஒரு அரசாங்கத்திடம் பலாத்காரத்தைக் காட்டாமல், ஒத்துழைக்க மறுப்பது. (அரசாங்கஉத்திரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுப்பது.)

Fascism. பாசிசம்.

இட்டாலி என்ற ஐரோப்பியநாட்டில் முஸோலினியின் தலைமையின் கீழ் நடக்கிற ஒரு அரசியல் இயக்கம். அதுபொது உடமையைத்தகர்த்தே தீர்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாக உள்ளது. (பொதுவாக பொது உடமை தத்துவமானது)

Nazi. நாசி

ஜர்மனியில் ஹெர் அடால்ப்ஹிட்லர் என்பவரின் கீழுள்ள தேசீயக் கட்சியே. நேஷனல் சோஷியலிசம் என்பதற்கு நாசி என்னப்படுகிறது.

Federalism. பிடரலிசம்.

எந்த ஒரு அரசாங்கத்தில் அரசியல் அதிகாரங்களெல்லாம் சட்டப்படி அமைக்கப்பட்டு அவற்றை மத்திய அரசாங்கத்துக்கும் அதனுள் அடங்கிய மாகாணங்கள்—சமஸ்தானங்கள் என்பவைகளுக்கும் வீதப்படி பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட ஒரு அரசாங்கத்திற்குப் பெயர்.

Veto. வீடோ.

ஒரு அரசாங்க சட்ட சபையானது ஒரு விஷயத்தை நிறைவேற்றிய பிறகு, அதை ஏற்றுக்கொள்ளுவதற்கு அந்த ராஜாங்க நிர்வாக அதிகாரியானவர் மறுத்து நிராகரித்து விட்டால் அந்தப்படிநிராகரிக்கிற செய்கைக்கு சொல்லப்படும் வார்த்தை.

Pour parlar. போர் பார்லர்.

பல தேசங்களின் பிரதிநிதிகளோ—பல கட்சிகளின் பிரதிநிதிகளோ தங்களுக்குள் விவாதத்திற்கு ஏற்பட்டிருக்கிற விஷயங்களைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளுவதற்காக ஒன்று கூடி உட்கார்ந்து யோசனை செய்கிற கூட்டத்திற்குப்பெயர்.

Democracy. டிமாக்கரசி.

குடிகளின் நன்மைக்காக—குடிகளால் ஆளப்படுகிற—குடிஜனங்களது அரசாங்கம். (இது அமெரிக்க தேசப் பிரசிடெண்டாக இருந்த லிங்கோன் அவர்களது விவரிப்பு.) ஒரு மன்னன் இருந்து ஆளும் அரசாங்கத்திலிலிருந்து இதுவேறுபட்டதாகும்.

Extradition. எக்ஸ்ட்ரா டிஷன்.

ஒரு தேசத்தில் தஞ்சம்புகுந்த ஒருவனை அத்தேசத்து அதிகாரிகள், அவனை வேண்டுமென்று கேட்கிற பிற நாட்டின் அதிகாரிகளிடம் ஞாயமின்றிப் பிடித்துக்கொடுத்து விடும் செய்கைக்குப் பெயர்.

Bicketing. பிக்கட்டிங்.

வியாபாரம் நடக்கும் ஒரு ஸ்தலத்தின் முன் நின்று கொண்டு, எவரையும், அங்கு போய் செவ்வித ஒரு பொருளும் வாங்கவொட்டாமலோ—அங்கே வேலைக்குக்கூட போகவொட்டாமலோ—தடை செய்து கொண்டு காவல் செய்யும் காரியத்திற்குப் பெயர். அதாவது மறியல் செய்வது.

Whip. விப்.

ஒரு அரசியல் கட்சியிலுள்ள மெம்பர்களைப் பிரிந்து போகவிடாமலும்—அவர்களைக் கட்சிக்குள்ளேயே இழுத்து வைத்துக்கொண்டும், வோட்டுகள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் வருகையில் அவர்களைத் தயாராக இருக்கும்படி செய்து கொண்டும் இருக்கிற உத்தியோகஸ்தரைக் குறிக்கும் பதம்.

Republic. ரிபப்ளிக்.

மன்னன் இருந்து ஆளாத குடியரசாங்கத்திற்கு மட்டும் கொடுக்கப்படும் பெயர்.

Little Entente லிட்டில் இன்டென்ட்.

ஐரோப்பாவிற்குள் தென் கிழக்குப் பாகத்தில் அமைந்திருக்கிற ஸெக்கோஸ்லே வோகியா,—யூகோஸ் லேவியா, ரொ

ரோனியா ஆகிய மூன்று நாடுகளையும் சேர்த்துக் குறிக்கும் சொல்.

Self-determination. செல்ப் டிட்டர்மினேஷன்.

ஒவ்வொரு தனிப்பட்ட ஜன வகையாராவும் தன்னுடைய சுயாதீனத்திற்கும், தன்னுடைய அரசியல் அமைப்புக்கும் தன்னுடைய மற்ற எந்த அரசியல் சங்கதிக்கும் தானே யோசித்து முடிவு செய்து கொள்வது.

Nationalisation. நேஷனலிசேஷன்.

ஏடுகொடுத்தாவது ஏடுகொடுக்காமலாவது தேசத்திலுள்ள சகல நிலங்களையும் வர்த்தகங்களையும் கைத்தொழில்களையும் அரசாங்கமானது தன் கையிலேயே எடுத்துக்கொள்வது. அதாவது தனிப்பட்ட மனிதர்களின் வியாபாரம், தொழில், விவசாயம் என்பது மாறி சகலமும் அரசாங்க சொந்தமாக நடத்தப்படுவது. மக்களின் சகல தேவைகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு செய்வது.

Racketter. ரேக்கட்டர்.

கைத்தொழில்கள் செய்து பிழைக்கிறவர்களிடமிருந்து—அவர்களைப் பயமுறுத்தி—மிரட்டி படிப் பணம் வசூலித்துப் பிழைப்பது.

Salotage. சாலோடேஜ்.

கைத்தொழில் சம்பந்தமான வம்பு சண்டை ஏற்படுகிறபோது, தொழிலாளிகளாக இருக்கிறவர்கள் வன்னெஞ்சம் கொண்டு எதாவது சொத்தை அழித்து விடுவதுண்டு. அந்தச்செய்கைக்குச் சொல்லப்படும் வார்த்தை.

Socialism. சோஷலிசம்.

நிலத்திலாவது மூதலிலாவது தனி உடமை என்பது இல்லாமல்—அதை ஒழித்து—அரசாங்கமே அத்தேசத்திலுள்ள சகலத்தையும் தனக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையாகும்.

Soviet சோவியத்.

ருஷ்யாவில் மந்திராலோசனை செய்யும் எந்த ஒரு சபைக்கும் இடப்பட்ட பெயர்.

Reparations. யுத்த நஷ்ட ஈடுகள்.

Protocal. புரோடகல்.

பின்னால் முடிவாகச் செய்து கொள்ள வேண்டிய ஒரு உடன்படிக்கைக்காக முன்னால் தயார் செய்துகொள்ளும் ஒரு யாதாஸ்து.

White Paper. வொயிட் பேப்பர்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அரசாங்க தோரணையில், தம் நடைமுறையைத் தெரிவிக்கிற அறிக்கை.

Fascist. இட்டாலி தேசத்தின் தேசீயக் கட்சி.

Peferendum செய்யப்போகிறதாகவுள்ள சட்டத்தை ஜனங்களின் முன் எடுத்துக் காட்டி, பொதுஜனங்களது அபிப் பிராயம் இன்னது என்று தெரிந்து கொள்வது.

Coup d' etat. திடீரென்று அரசாங்கம் மாறுவது.

Puplic utilites. பப்ளிக் யுட்டிலிட்டி.

சர்வ ஜனங்களுக்கும் உபயோகமாக இருக்கக்கூடிய எலக் ட்ரிக் லைட், கேஸ்லைட், டெலிபோன், தெருவில் போகும் கார் வகைகள் முதலியவை.

Entente. என்டெண்ட்டி.

ஒரு அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்தோடு கட்டுப் பட்டு நட்புக்கொண்டிருப்பது.

Moratorium. மொரடோரியம்.

பண நெருக்கடி ஏற்படுகிற காலத்தில் அரசாங்கத்தார், ஒரு குறிப்பிட்ட கால எல்லை வரைக்கும், வியாபார ஒப்பந்தமோ, கடன் தீர்த்தலோ, கொடுத்தல் வாங்கல் வசூலிப்போ ஆகிய காரியங்கள் நடைபெற வேண்டாமென்று தடை செய்து உத் தரவு பிறப்பித்திருப்பார்கள். எவ்வளவு காலம் இவ்வுத்தரவு இருக்கிறதோ அந்தக் காலத்தைத்தான் Moratorium என்பர்.

Syndicalism. சிண்டிகலிசம்.

பொருள்கள் உற்பத்தியாகிற மார்க்கத்தையும் பொருள்கள் நியோகமாகிற மார்க்கத்தையும் தொழிலாளிகளின் கையி லேயே இருக்கும்படியாக மாற்றவேண்டும் என்று கூறுகிற ஒரு இயக்கத்தைக் குறிக்கும் பதம்.

அம்பட்டர் வரலாறு.

ஒரு ஆராய்ச்சி.

(பண்டிதர் அ. கிருஷ்ணசாமி)

வுழகு செய்யும் ''அம்பட்டர்'' என்னும் சாதியினர் அவனிபின்கண் எங்கும் உளர். உலகில் எங்குமே சாதி என்பது பரம்பரையாக வழங்குவதில்லை எனினும், இந்தியாவிலே அச் சாதி பரம்பரை என்னும் வழக்கம் வன்மையாக உள்ளது. அதனினும் தென்னிந்தியாவில்—தமிழ் நாட்டில் வேரூன்றி உரம்பெற்றுள்ளது. உரம் பெற்ற சாதியினரில் பெரும்பாலோர் தத்தமது சாதியின் வழி முறையை ஓவ்வோர் வழியாக எழுதி வைத்துள்ளார். அங்ஙனம் எழுதுவதில் மக்கள் பிறப்பு முறையினையும் இயற்கை முறையினையும் செவ்வனே ஆராய்ந்து அதன் வழியாகச் சரித்திரமெழுதுவோர் மிகச்சிலர். தமது பரம்பரை அநாதி காலந் தொட்டு நிலை பெற்றுள்ளதென்றும், பரம்பரையின் முதல்வன் சூரியன், சந்திரன் என்றும் புராணம் எழுதி வைத்து விடுவோர் மிகப்பலர். இங்ஙனம் தம்மரபின் பெருமையை மனம் போனவாறு புனைந்து கூறும் புராணக் கதைகளை உண்மை யென்று நம்பியே, நம்மிற் பெரும்பாலோர் சாதிச் சண்டையில் தலை சிறந்து நிற்கின்றனர். சாதியைப் பற்றிய புராணங்களும் பிறவும் சாதிகளைச் சிறப்பித்துக் கூறுவான் வேண்டி எழுதப்பட்டன சில; சாதிகளுக்குள் பகை வளர்ப்பான்வேண்டி எழுதப்பட்டன பல. இத்தகைய புராணங்கள் ஒன்றுமே ''அம்பட்டர்'' பெயரால் வெளிவராமையான் அப் புராணப் பொய்க் குப்பைகளைக் கிளறாமல் ''அம்பட்டருக்கு'' வழங்கி வரும் பெயர்களின் வழியாகவே இவ்வரலாறு ஆராயப் பெறுகின்றது.

அம்பட்டர் பெயர்களாவன:—பரிகாரி, மருத்துவர், பண்டிதர், மயிர்வினைஞர், நாவிதர், மங்கலவர், அம்பட்டர்,

குருக்கள், பெருமஞ்சிகன், எனாதி, சிரையன், மங்கலியன், சிவன் என்பனவாம்.

பரிகாரி:—பரிகரியென்னும் பகுதியின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். பரிகரித்தல், நீக்குதல், தணித்தல் முதலியன ஒரு பொருளன. உடம்பிற்கு வரும் பல பிணிகளையும் தணிக்கும் மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்தமையால் பரிகாரி என்ற பெயர் வந்திருத்தல் வேண்டும். மருத்துவர் என்பதும் இது பற்றி வந்ததே. இன்னும் இவ்வாறு மருத்துவத் தொழில் செய்யும் அம்பட்டர் நாட்டு புறங்களினும் நகரங்களினும் வசித்து வருகின்றனர். மருத்துவத் தொழில் புதிதாகக் கைகொள்ளப்பட்டதன்று. பழங்காலந் தொட்டு வழி வழி முறையாகக் கொள்ளப்பட்டதாகும். நாட்டு வைத்திய முறைகளைப் பின்பற்றி இரண வைத்தியம் (சத்திர வைத்தியம்) பிறவைத்தியம் இவற்றில் மிக்க திறமையுள்ளவர் இன்னும் இருக்கின்றனர். பல்லடம் தாலூகா அப்பகாயக்கன்பட்டி தோழர் கந்தப்பன் என்பவர் இரண வைத்தியத்தில் சிறந்தவர் என்பதும் சென்னை பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் எல்லா வைத்தியத்திலும் சிறந்தவர் என்பதும் யாவரும் அறிவர். பெயர்பெற்ற ஆங்கில வைத்தியர்களால் தீர்க்க முடியாதென்று விட்ட நோய்களை இன்னோர் தீர்த்திருக்கின்றனர். தோழர் ஆனந்தம் அவர்கள் மருத்துவத் தொழிலேயன்றி மற்ற நூலாராய்ச்சியிலும் வல்லவராயிருப்பது அக் குலத்திற்கே பெருமையாகும். மருத்துவன் தாமோதரனார் என்னும் பழந்தமிழ்ப் புலவர் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவர் இருந்தனர். தாமோதரனார் இயற்றியதாகத் திருவள்ளுவ மாலையில் "சீந்திநீர்க்கண்டம்" என்னும் பாடலும் ஒன்றுள்ளது. இதனால் அம்பட்டருக்கு மருத்துவர் என்னும் பெயர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரோ இருந்ததென்பது பெறப்படும்.

பண்டிதர்:—பண்டிதர் என்பது மருத்துவர் என்னும் பொருளிலேயே வழங்கப்படினும் வேறு நூற்களினும் பாண்டித்தியம் மிக்கிருந்தமையால் பண்டிதர் என்னும் பெயரும் பெற்றிருக்கக்கூடும். செந்தமிழ் மொழியில் சிறந்த பண்டிதர் பண்டும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். பழங்காலத்தில் செந்தமிழ்புல்வர்—பண்டிதர் அம்பட்டர் குலத்திலும் இருந்தனர் என்பதற்கு மருத்துவன் தாமோதரனாரே சரியான சான்றாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் தாரா

புரத்தில் வேலாயுத பண்டிதர் என ஒருவர் இருந்தனர். அவர் ஆயிரம் ஆயிரம் தமிழ்ச் செய்யுட்கள் இயற்றியுள்ளார். புராணங்கள் இயற்றும் புலமை பெற்றிருந்தார். ஆகையால் அம்பட்டர் குலத்தில் செந்தமிழ்ப் புலவரும் பிறந்து பேறு பெற்றிருந்தனர்; இருக்கின்றனர்.

மயிர்வினைஞர்:—என்பதின் பொருள் அனைவரும் அறிந்ததே. இது காலை அம்பட்டரின் பெரும்பாலான தொழிலும் அதுவே.

காவிதர்:—இதமாகப்பேசும்நாக்கினையுடையவர். அம்பட்டருடன் கலந்து பழகினவர்க்கு இதன் உண்மை புலப்படும். காவிதர் என்பது நாசுவர் எனவும் வழங்குகின்றது.

மங்கலவர்:—மங்கியன் என்பதும் மங்கலவர் என்பதும் ஒரே பொருள். மங்கியன் எனத் தமிழர் வழங்குகின்றனர். மங்கலவர் "மங்கலவாடு" எனத் தெலுங்கர் வழங்குகின்றனர். மங்கலியன் என்னும் பெயர் பிங்கலநிகண்டிலும் சொல்லப்பெற்றுள்ளது. ஆகையால் மங்கலியன் என்னும் மொழி மிகப்பழங்காலத்திலிருந்தே வழங்கப்பட்டதாகும்.

மங்கலம் என்பது சுபம். சுபகாரியத்திற்குரியவர் மங்கலியர். அங்ஙனம் எச்சுபகாரியம் அம்பட்டரால் செய்யப்பெற்றது என்பதே ஆராய்தற்பாற்று. நமது தமிழ் நாட்டுப் பண்டைத் தமிழ் மக்களுள் கொங்கு வேளாள குலத்தினரும் ஒரு வகையர். அவ்வேளாளர்களைப் பற்றிப் பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் 2000 வருஷங்களுக்கு முன்பே மிகச்சிறப்பாய் மொழியப் பெற்றுள்ளன. 2000-வருஷங்களுக்கு முன்பே வேளாளர் குறுநில மன்னர் (ஜமீன்) பெருநிலக்கிழவர் (மிராஸ்தார்) ஆகவும் தமிழ் நாட்டில் வதிந்து பெருமித வள்ளல்களாக வாழ்ந்து வந்தனர். இத்தகைய வேளாள குலத்தினர் திருமணம் நடத்துவதற்கு அம்பட்டரையே அமர்த்தி வைத்தனர். வேளாளர் குலத்தில் நடக்கும் கலியாணச் சடங்குகளும் பிறசுபகாரியங்களும் அம்பட்டரே நடத்தி வைத்தனர். இன்னும் பெரும்பாலான வேளாள குலத்துக் கலியாணங்களில் அம்பட்டரே புரோகிதராக முன்நின்று நடத்திவைக்கின்றதைக் கண்ணாரக்காணலாம். கலியாணத்தின் சிறந்த சடங்குகளிற் சிறந்தது திருமங்கிலியந்தரித்தல். அத்திருமங்கிலியச் சடங்கே அம்பட்டரால் நடத்தப்பெற்று வந்தமையால் .அவருக்கு மங்கலியர் என்னும்

மங்கலப்பெயர் கொடுத்தனர். இம்மங்கலியர் என்னும் மொழி 2000 வருஷத்திற்கு முன்னும் வழங்கப்பெற்றது. ஆகையால் மங்கலவர் என்போர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே புரோகிதத் தொழில் செய்து பெயர் பெற்ற குலத்தினராவர்.

உயர்வு பெற்ற தமிழ்க் குலத்தினராகிய வேளாளர்க்குப் புரோகிதத் தொழில் செய்துகொண்டு வந்தமையால் ''மங்கலவாடு'' என்னும் பெயர் தெலுங்கர் சூட்டினர். தமிழ் நாட்டிற்குத் தெலுங்கர் வட நாட்டிலிருந்து வந்து குடியேறினது சிறிது பழங்காலமேயாகும். எனினும் தெலுங்கர் நாட்டு ராயடு அல்லது ''நாயுடு'' ''நாயக்கர்'' குலத்தினர் தமிழ் நாட்டில் குடியேறி அரசராக ஆண்ட காலம் 400 வருஷங்களாகும். 400 வருஷங்களுக்கு முன்பு அம்பட்டர் புரோகிதத் தொழில் செய்து சிறப்பாகத் தமிழ் மக்களுடன் வாழ்ந்து வந்தமையால் அம்பட்டரை ''மங்கலவாள்ளு'' என உவந்து மொழிந்தனர்.

வேளாள குலத்தினரின் திருமணச்சடங்குகளில் சொல்லப்பெறும் மந்திரங்கள் தமிழ் மொழியில் செய்யப்பெற்றிருந்தன. தூய தமிழ் மக்கள் திருமணத்தில் சிறந்த தமிழ் புரோகிதர் மங்கலவர் செந்தமிழிலே மந்திரங்கள் ஓதி வந்த காலமும் ஒன்றிருந்தது. அத்திருமணங்களில் ஓதும் மந்திரங்களைச் செய்யுள் வடிவமாகக் கம்பநாடரும் செய்திருக்கின்றனர். இங்ஙனம் பல புலவரும் செய்திருப்பர். கம்பநாடர் செய்த பாடல் ''வாழ்த்து பாடல்'' என ஓர் நூல் திருச்செங்கோடு தோழர் முத்துசாமிக்கோனார் அவர்களால் அச்சிடப் பெற்றுள்ளது. கம்பநாடர் காலமும் 1000 வருஷங்களுக்கு முன்னதாகும். ஆகையால் 1000 வருஷங்களுக்கு முன்னரே செவ்விய தமிழ் மொழியில் மந்திரங்களைச் சொல்லிய புரோகிதர் அம்பட்டர் எனின் அவர் பெருமையும் புகழும் தமிழ் நாடு முழுவதும் போற்றியிருத்தல் வேண்டும்; பரவியிருத்தல் வேண்டும். வடக்கே பூரிஜகந்நாதத்தில் கோயில் அர்ச்சகர்களாகப் பழங்காலந்தொட்டு அம்பட்டர் இருந்து வந்தனர். இப்பொழுது கோயில் நிர்வாகப்பொறுப்பு முழுவதும் அம்பட்டர் ஆளுகையிலேயே இருக்கின்றது.

அம்பட்டர்:—குருக்கள், அம்பட்டர் என்பன ஒரே பொருள். அம்பட்டர் என்னும் பெயர் புரோகிதம் செய்ததினால் வந்ததாகும். சில நூற்றாண்டுகளாகப் புரோகிதம்

செய்பவர் பார்ப்பனர்களாக இருக்கினறனர். பார்ப்பனர்களுக்குப் பட்டர், குருக்கள் என்னும் பெயர்கள் இன்றும் வழங்குகின்றன. பார்ப்பனர்களைப்போல் அம்பட்டரும் புரோகிதம் செய்து வந்தமையால் அவர்களுக்கும் அம்பட்டர், குருக்கள் எனப்பெயர் வைத்தனர். அம்=அழகிய, பட்டர்=பார்ப்பனர். இவர்கள் தமிழ்நாட்டு புரோகிதர்ஆயினமையால் "அம்பட்டர்" எனஅடைமொழியுடன் வழங்கலாயினர். தமிழ் நாட்டில் பலவகைப்பிராமணர் இருக்கின்றனர். உதாரணமாக சிலர் விசுவகர்மப்பிராமணர்கள் என்றும் கொங்கணி பார்ப்பனர்கள் என்றும், சிலர் சௌராஷ்டிர பிராமணர்கள் என்றும், சிலர் ஸ்மார்த்தப்பிராமணர்கள் என்றும், சிலர் வைணவப் பார்ப்பனர்கள் என்றும், சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவ பார்ப்பனர்கள் என்றும், குருக்கள் பார்ப்பனர்கள் என்றும் நம்பூதிரி பார்ப்பனர்கள் என்றும் பல பார்ப்பனர்கள் இருப்பது போலவே அம்பட்டரும் உண்மையில் ஒருவகைப் பார்ப்பனக்குலத்தவராவர். அதனாலேயே தான் பட்டர் என்கிற பெயர் ஏற்பட்டிருக்கவேண்டுமே அல்லாமல் வேறில்லை.

தெனாலி இராமன்காலத்தில் ஓர் கதைகேட்டிருப்பீர்கள். என்னையெனில், கருப்புநாயை வெள்ளை நாயாக்கினது. இக்கதையை வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் பேசுவர். அரசன் நாவிதனைப் பார்ப்பானாகச் செய்ததற்காகக் கருப்பு நாயை வெள்ளை நாயாக்கினதென்பர். அதாவது, நாவிதர் பார்ப்பனர் ஆகமாட்டார் என்பதாம். ஆனால் இதன் உண்மை அங்ஙனமன்று. அக்காலத்திலிருந்த அரசன் நாவிதர் என்னும் பிறப்பின் பெருமையில் பெரிதும் உணர்ச்சி கொண்டவன். அவர்களை உண்மையான அம்பட்டர்—பார்ப்பனர் ஆக்கவேண்டுமென்று முயன்று பல ஆயிரம் பேர்களை அங்ஙனம் செய்வித்தனன். இவ்வாறு பார்ப்பனரான அம்பட்டப்பார்ப்பனர் பலர் இருக்கின்றனர். அவரைத் தம்பிடிப்பார்ப்பான் என்றும் சொல்வார்கள். அத்தம்பிடிகள் ஆரியப் பார்ப்பனரும் ஆகாமல் தமிழ்ப்புரோகிதர் அம்பட்டரும் ஆகாமல் திரிசங்கு சுவர்க்கத்திலிருக்கின்றனர். இங்ஙனம் நாவிதர் பார்ப்பனர் ஆயினதைப் பொறுக்காமல் அதைப் பொய்மையாக்கக் கற்பிக்கப்பட்டதே கருப்பு நாயை வெள்ளைநாயாக்கின கதையாகும். தெனாலி ராமனும் பார்ப்பனன் என்பதை மனதில் வைத்துக்கொள்க.

ஆனால்இங்கு ஒன்றுவினவலாம். என்னைபனில்,மயிர் கணைதல் தொழில்செய்யும் காவிதன்—அம்பட்டன் எங்ஙனம் பார்ப்பனன் ஆவான்னன்பதாம். குலத்தினால் பிறப்பில்உயர்வு தாழ்வு என்பது ஆரியர்கள் வந்தபின்னரும் அவர்களின் மாய வலையில் சிக்கியபின்னரும் நமது தமிழ் காட்டில் தோன்றிய தேயன்றி பழங்காலத்தில் தமிழ்காட்டில் பிறப்பினால் உயர்வு தாழ்வில்லை என்பதை அனைவரும் அறிவர். பண்டைக் காலம் குணம் தொழில்களால் குலங்கள் பிரிக்கப்பட்டன. அவ்வாறாகும்பொழுது ஓர் குலத்திலே அந்தணர், அரசர், வணிகர், பணிசெய்வோர் எனப்பல பிரிவினர் இருக்கலாம். இங்ஙனம் ஒரு வயிற்றில் பிறந்த உடன்பிறந்தார்களிலும் இருக்கலாம். மேல் காட்டில் உடன்பிறந்தார்களுக்குள் ஒருவன் குருவாகவும் மற்றவன் அரசனாகவும் பிறன் வாணிக னாகவும் ஏனையோன் பணியாளனாகவும் இருப்பதை இன் றும் காண்கிறோம். அத்துணையேன்? நமது காட்டில் ஆரியப் பார்ப்பனர்களுக்குள்ளேயே அங்ஙனமிருக்கவில்லையா? ஒரு பார்ப்பனன் குருவென்று காணிக்கைவாங்க வருகின்றான்; ஒருவன் உத்தியோகஸ்தன்—அரசன் என்று இலஞ்சம் கேட்க வருகின்றான்; ஒருவன்வியாபாரியென்றுகொள்ளையடிக்கவரு கிறான்; ஒருவன் சமயல்காரனாக வந்து எச்சில் இலை எடுக் கின்றான்; ஒருவன் தூதுவனாக இருக்கின்றான். இன் னோர் அனைவரும் பார்ப்பனர் ஆகும்பொழுது காவிதர்பார்ப் பனர் ஆகமாட்டாரா? இன்னும் பார்ப்பனன் மயிர்கணை தல் தொழிலாகிய காவிதத்தொழில் செய்கிறான்; தோல்வியா பாரமாகிய சக்கிலியத்தொழில் செய்கிறான்; வாத்தியம் வாசித்தலாகிய நட்டுவத்தொழில் செய்கிறான். இத்தனை யும் செய்துகொண்டு நான் பார்ப்பனன், உயர்ந்தவன் என்கின் றான். நாமும் காலில் விழுகின்றோம்; அழுகின்றோம். அந்தோ! என்னே! அறியாமை! அறியாமை!!

அம்பட்டர்களின் மற்றைய பெயர்களின் காரணங்களும் வரலாறுகளும் எழுதின் மிகவும் விரியும். சுருங்கக்கூறின் அம் பட்டரும் ஓர் காலத்தில் உயரிய நிலையில் சீரிய தொழில்— புரோகிதத் தொழில் செய்து வந்தனர் என்பதாம்

அம்பட்டரே! பழந்தமிழ்ப் புரோகிதரே!

உங்கள் பண்டைக்குலத்தின் பெருமையைச் சிந்தியுங்கள். உங்கள் புரோகிதத்தொழிலைப் பெரும்பாலும் பார்ப்பனன் பறித்துக்கொண்டான். மயிர்கணைதல் தொழிலையும் தன்

சிறு கதை.

குலகுருவின் திருவிளையாடல்.

(ஜே. பி. கிருஷ்ணன்)

1.

அவனுக்கு வயது 12 தான்: ஆனாலும் அவன் வயதுக்கு மிஞ்சிய புத்திசாலித்தனம் படைத்தவனாயிருந்தான். அந்தக் குடும்பத்தில் அவன் பிறந்தமைக்குச் "சேற்றில் மலர்ந்த செந்தாமரை" என்று தான் சொல்ல வேண்டும். அதுவே சரியான உவமையாகும்.

"அப்பா! செல்வன் பாரப்பா என்னைக் கேலி செய்கிறான்" என்று மிகுந்த வருத்தத்துடன் சொன்னான் அவன்; தந்தையின் மடியில் உட்கார்ந்து அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

"எதற்காக?" என்று கேட்டார் பாலசுந்தரம், அனாயாசமாக எங்கேயோ பார்த்த வண்ணம். அவர் கவனம் வேறிடத்திலிருந்தது.

மட்டில்பார்ப்பனன் பார்த்துக்கொள்ளுகின்றான். மயிர்கள் தல் தொழிலிலும் பெரும்பணம் வருமென்றிருந்தால் வெளிப் படையாக அனைவருக்கும் கூவரம் செய்வான். அதுகாலை உங்கள் மயிர்களைதல் தொழில் பார்ப்பனராலும் மற்றைய செட்டியார், நாயுடு, கவுண்டர், பிள்ளை, முதலியார் முதலானவராலும் கவரப்படுமென்பதில் ஐயமில்லை. அம்மயிர்த் தொழில் போனால் போகட்டும். உலகில் எத்தொழிலையும் மக்களுக்கு கேடுவராவண்ணம் செய்யலாம். பழங்காலத்திலிருந்தே புரோகிதத் தொழில் செய்யும் பார்ப்பனராக இருந்தே வருகின்றோமென்பதைத் திடமாகக் கொள்வீர்களாக.

"யாரோ ஒருத்தன் நம்ம சாதிக்குலகுருவாம்; அவன் நாளைக்கு நம்மவூருக்கு வறப்போறானாம்; அவன் காலிலே நாமெல்லாம் தடிமரமாட்ட விழப்போறமாம்; காசையும், பணத்தையும் அள்ளித்தருவோமாம்; அவன் பகல் வேஷக் கார ஆசாமியாம். மூடத்தனமாக அவன் காலைக்கழுவிய தண்ணீரை நாமெல்லாம் பிரசாதமென்று குடிப்போமாம். இன்னும் என்னென்னமோ செல்வன் பேசரானப்பா, பள்ளிக்கூடப்பசங்களெல்லாம் சிரிக்கறாங்க" என்றான் சிறுவன் வாடியமுகத்துடன்.

சேகரின் அந்தச் சொற்கள் பால சுந்தரத்தின் வைதீக மனத்தைச் சிறு சிறு அம்புகளாகத் துளைத்தன. கோபத்தால் அவர் கண்கள் சிவந்து விட்டன. சேகரை உற்று நோக்கினார். அவனது களங்கமற்றப்பார்வை, மாசு மறுவற்ற வதனம், அவருக்கு ஒரு தந்தையின் கடமையை ஞாபக மூட்டியன. அவரது கோபம் சற்றுத்தணிந்து சாந்தமாகச் சொன்னார்.

"சேகர்! செல்வனின் தகப்பன் மாணிக்கம் ஒரு நாஸ்திகன். சாமியில்லை, பூதமில்லை, சாஸ்திரமில்லை, மதமில்லை என்று சொல்லித்திரியும் மடையன். அவன் புத்தி தானே மகனுக்கும் வரும்? அவன் ஒரு நாஸ்திகக்குஞ்சு. அவர்கள் பேசுவதெல்லாம் முட்டாள்தனமான—குறும்புத்தனமான பேச்சுகள். அந்தப்பயல்கள் சாவகாசமே உனக்கு வேண்டாம். நீயும் கெட்டுப்போவாய்" என்று. அவர் குரல் நெஞ்சிலுள்ள ஆத்திரத்தைக் காட்டியது. உதடுகள் படபடத்தன!

"ஆமாம்! குலருரு என்றால் யாரப்பா? அவருக்கென்ன வேலை?" என்று கேட்டான் சேகர் மறுபடியும். இளங்கன்று பயமறியாதல்லவா?

"சேகர்! அது பெரிய விஷயம்; உனக்கு விளங்காது. இருந்தாலும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். குலகுரு என்பவர் ஒவ்வொரு குலத்திற்கும் அல்லது சாதிக்கும் தலைவரைப்போன்றவர். மனித சமூகத்திற்கு பரமார்த்திக போதனைகளைத் தந்து, ஆச்சார அனுஷ்டானங்களை வகுத்து, கடவுளின் அருளுக்கு பாத்திரமாக்கும் பெரிய மகான்; நல்லொழுக்க போதகர்; சாதியிலே உயர்ந்தவர்.

அவரது சேவையால் நமக்குப் பல காரியங்கள் அனுகூல மாகும்'' என்றார் ஒரு தனிப் பெருமையுடன் பாலசுந்தரம்.

சேகர் இன்னும் என்னவோ கேட்கலாமென்று வாயெடுத்தான். அதற்குள் சமையல் அறையிலிருந்து தாயின் அழைப்புக் குரல் அவனைப் பற்றியிழுத்தது. அவன் தந்தையின் மடியினின்றும் துள்ளிக் குதித்து உள்ளே ஓடிவிட்டான்.

பாலசுந்தரம் வெற்றிப் புன்னகையுடன் எழுந்தார். சேகரின் மாறுபட்ட மனத்தைத் தன் வழியில் திருப்பிவிட்டதாக அவரது நினைப்பு. சந்தோஷமுங் கூட! மீண்டும் பழைய கவனம் வந்தது.

நாளைய தினம் நகருக்கு விஜயமாகும் குலகுருவைத் தகுந்த முறையில் வரவேற்க வேண்டும்; அவருக்கு வருஷந் தோறும் செலுத்தவேண்டிய கட்டளை வரிப் பணங்களை வசூலிக்க வேண்டும். இன்றிரவே நம்ம சாதிக்கூட்டத்தைக் கூட்டுவிக்க வேண்டும். இந்தக்காரியங்களையெல்லாம் செய்து முடிக்க அவர் மனம் ''திட்டம்'' வகுத்துக்கொண்டிருந்தது. கால்கள் ஊர்ப்பெரியதனக்கார ரங்கநாதஞ் செட்டியார் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தன.

2.

அடுத்தநாள் இரவு மணி 8 இருக்கும். கந்த சுவாமி கோயிலில் பெரிய ஆரவாரம்! அதிர் வேட்டுக்கள் பெருஞ் சப்தத்துடன் வானத்தை ஊடுருவிச் சென்றன. மேளவாத்தியங்கள் ''ஜாம் ஜாமெ''ன முழங்கின. அந்தணர்களின் வேத பாராயணம் ''பிராமணீயம்'' செத்துப்போகவில்லை யென்பதை வலியுறுத்திக்கொண்டிருந்தது. காந்த விளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்தன; அதே சமயத்தில் ''கணார் கணா''ரென்ற சேகண்டியோசை, ''துத்தாரி'' என்ற வாத்தியம் முழங்கிற்று. உடன் பக்தர்களின் பரபரப்பும் பெரிய அமர்க்களம், யாவரும் குருவின் சேவைக்கு விரைந்து சென்றனர். அன்றுதான் குருபூஜை ஆரம்பம்.

அந்தப் பெரிய கோயிலின் வடதிசை உள் பிரகாரத்திலே அமைக்கப்பட்டுள்ள பீடத்தின் மீது, நித்யானந்த

சொரூபியாக வீற்றிருந்தார் ஸ்ரீமத் குமர குருபர சுவாமிகள். வயது 30-க்கு மேலிராது. கட்டுத்தளராத கொழுத்த உடலமைப்பு. அழகிய முகம், சிவப்பு நிறம், அருள் பொழியும் பெரு நோக்கு. தங்கத்தாலான உருத்திராட்ச மாலைகள் உள்பட பல "ரக"மான சைவச்சின்னங்கள் அவரது மேனியை அலங்கரித்துக்கொண்டிருந்தன! அவர் பாதத்தின் கீழ் இரண்டு பெரிய தட்டுகளில் காணிக்கைப் பணம் வெள்ளி நாணயங்களாக வைக்கப்பட்டிருந்தன. அது வன்றி பக்தர்கள் மனமுவந்து அளித்த பல பொருள்கள் வேறு!

பூசை ஆரம்பமாய் விட்டது. பக்தர்கள் "சன்னதி" விட்டு நின்றார்கள். ஒரு குருக்கள் மணியோசை எழுப்பினார், ஒருவர் முரசை முழக்கினார். சோமநாத குருக்கள் கற்பூரம் கொளுத்திய தட்டை வெகு வினயத்தோடும், பணிவோடும், இரண்டு கரங்களாலும் தூக்கி குருவின் முன்பு ஏந்தினார். அதே சமயத்தில் ஒரு பக்தர் நிதானமாக— ஆனால் பலத்த குரலில் "சம்போ சங்கர மகாதேவ" என்றார், அதைத் தொடர்ந்து அனைவரும் "அரஹரமகாதேவ" என்று கோஷமிட்டு கன்னத்திலடித்துக்கொண்டதுடன், சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து பணிந்தனர். வாத்தியங்களின் ஏக முழக்கம்! குருவின் முகம் தானாக மலர்ந்து உதடுகள் விரிந்தன. அவரது கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சிந்தியது. ஆருக்குத்தான் தெரியும் அவர் மகிமை!

தந்தை செய்வது போலவெல்லாம் செய்து கொண்டு வந்த சேகருக்கு, எல்லாரும் கீழே விழும்போது செல்வனின் நினைப்பு வந்து விட்டது. "தடி மரமாட்டமா" என்ற வாக்கியம் பெரிய உருவில் சிரித்துக்கொண்டு அவன் முன்னால் நின்றது! விழுந்துப்பணிய அந்த இளமனசு நாணியது, யோசித்தபடியே நின்றுவிட்டான்.

அவனுக்குப் பின் புறத்திலிருந்து "கிளுக்"கென்ற ஒரு சிரிப்பு; திரும்பிப்பார்த்தான்; ஒரு தூண் மறைவில் தன்னையும், மற்றவர்களையும் பார்த்துச் சிரித்தவண்ணம் செல்வன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அந்தச் சிறிய மனதில் ஒரே குழப்பம்; பல உன்னதமான உணர்ச்சிகள், நினைப்புகள் கொழுந்து விட்டன. செல்வனின் கேலிப்பேச்சும் சிரிப்பும் அவன் மனதைக் கிளறிவிட்டு, ஒரு "உண்மை" விதையை அங்கு நட்டு விட்டது! மெதுவாகக் கூட்டத்தை விட்டு நழு

வினான் சேகர். செல்வனிடம் வந்து அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, பரிதாபகரமாகச்சொன்னான். "அண்ணா! நீ சொன்னதெல்லாம் உண்மை. ஆனால் நிஜமா நான் விழுந்து கும்பிடவேயில்லை" என்று.

செல்வன் தனக்குள் பீரிட்டுக்கிளம்பும் சிரிப்பை அடக்கிக் கொண்டு, சேகரை அழைத்துக்கொண்டு வெளியேறினான் கோயிலை விட்டு. அவர்களிருவரும் மனமொத்த தோழர்களாய் விட்டனர்.

3.

சோமநாத குருக்கள் வீட்டில் குருவுக்காக ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவே தற்கால பூஜையறை; அந்தரங்க விடுதியுங்கூட!

"போனமாசம் எங்கண்ணாவுடன் நான் அங்கு வந்திருந்தபோது நீங்கள் வெளியூருக்கு சஞ்சாரம் போயிருந்தீர்கள். நீங்கள் இருப்பீர்களென்றே நம்பி, ஏமாந்து விட்டேன். என் மனசு என்ன பாடு பட்டது தெரியுமா?" என்று மிகுந்த வருத்தத்துடன் சொன்னாள் அவள்

"அலமு! என்ன செய்வது? ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன். நீ வரும் விஷயம் எனக்குத் தெரிந்திருந்தால் சஞ்சாரத்தைக் கூட ஒத்திப்போட்டிருப்பேன். எனக்குப் பணமா பெரிசு! என் கண்ணாட்டியின் இன்பத்திற்கு பணம் ஈடாகுமா? போனது போகட்டும், இப்பொழுதாவது காலத்தை வீணாக்காமல்....." என்று கொஞ்சிப் பேசிய வண்ணம் அவளைச் சேர்த்து அணைத்து ஆர்வத்தோடு முத்தமிட்டார் அவர்.

"விடுங்கள்; என்ன அவசரம்? இங்கு வேண்டாம். யாராவது வந்து விடுவார்கள். இன்றைக்கு நல்ல நிலாவெளிச்சம், இரவு 12 மணிக்கு மேல் கோயில் நந்தவனத்தில்....." என்று சொல்லி தன்னை விடுவித்துக்கொண்டாள் அலமு, அவள் மார்பகம் விம்மித்தணிந்தது.

அதே சமயத்தில் அறையின் வெளிப்புறத்திலே ஒரு கனைப்புக்குரல். உடன் அவர்கள் சம்பாஷணை நின்று விட்டது. அலமு திடுக்கிட்டு தூரமாக நகர்ந்து விட்டாள்,

தன்னைப்பற்றிக் கவலையில்லை, குருவுக்குக் கெட்ட பெயர் வரக்கூடாதென்பதே அவள் நோக்கம்! மீண்டும் அவர் சாதாரண முறையில் கேட்டார்; "அண்ணாவின் குடும்ப க்ஷேமம் எப்படி?"

அவள் சொன்னாள், "அதையேன் கேட்கிறீர்கள்; பழைய நிலைமை அடியோடு மாறிவிட்டது. போதுமான வரும்படியில்லாமல் நிரம்பக் கஷ்டம். யாரோ சுயமரியா தைக்காரன்களாமே அவர்கள் போடுகிற கூச்சலால் பிராம ணாளுக்கிருந்த மதிப்பே போய்விட்டது. அவன்களை ஒழிக்க நீங்கள் தான் ஒரு மார்க்கம் தேடவேண்டும். உங்களால்தான் அது முடியவேண்டும்."

"ஆமாம் எங்கள் ஊரிலுங்கூட இப்படித்தான் சிலர் துள்ளினார்கள். தகுந்த ஆட்களைப் பிடித்து அவர்களை அடக்கிவிட்டேன். இவர்களை வளரவிட்டால் நமது சமூ கமே அழிந்துவிடும். இன்றிரவே இதைப்பற்றி நாலு பெரிய மனுஷாளிடம் சொல்லி வைக்கிறேன். தவிர எனக்கும், உங் கண்ணாவுக்கும், ஏதாவது பெரிய வரும்படிக்கு வகைபார்க்க வேண்டும், அதற்குக் "கும்பாபிஷேகம்" தான் சரியானவழி. ஏன்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டியது தான். காலப்போக்கை யார் கண்டார்கள்?" என்றார் அவர் கண்களைச் சிமிட்டிக்கொண்டு.

அப்பொழுது சோமநாத குருக்கள் அங்கு பிரசன்ன மானார். "அலமு! மன்னி வெளியே போயிருக்கா, ட்ரை வர் சாயபு சாப்பாட்டுக்கு வந்து வெகு நேரமா இங்கு வெளியே காத்துண்டிருக்கான். போய் அவனுக்குச் சாதம் போடு" என்றார் அலமுவைப்பார்த்து. அண்ணன் கட்ட ளையை நிறைவேற்ற அவள் சென்றாள்.

ஸ்ரீமத் குமாகுருபர சுவாமிகளும், சோமநாத குருக்க ளும் "கும்பாபிஷேகம்" என்ற அஸ்திவாரத்தின் மீது ஒரு பெரிய மனக்கோட்டையைக் கட்டி முடித்தனர். அந்தக் கோட்டை அழியாதிருந்தால் அவர்களுக்கு நல்ல ஆக்கந் தான் என்பதில் சந்தேகமில்லை.

4.

"ராத்திரி பூஜையின்போது குருசுவாமிகள் சொன்ன தைக் கேட்டீர்களா?" என்று கேட்டார் ரங்கநாதஞ்செட்டி யார், வாயிலிருந்த வெற்றிலையை குதப்பிக்கொண்டே.

"பூராவும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். வாஸ்த வந்தான், காரணமில்லாமலா நமக்கெல்லாம் தொழில் கஷ்ட மும், நஷ்டமும், ஏற்படுகிறது? இப்பத்தானே தெரிகிறது, அவர் சொன்னபிறகு!" என்றார் பாலசுந்தரம்.

"இல்லை; எனக்கு அப்பொழுதே தெரியும். "சுயமரி யாதைச் சங்கம்" எப்பொழுது நம்மவூரில் வைத்தார்களோ அப்பொழுதே நான் சொல்லியிருக்கிறேன், நம்மவர்களுக்கு விநாச காலந்தானென்று! கடவுளையும், பூர்வீக சனாதன தரும சாஸ்திரங்களையும் தூற்றுவது சும்மாவிட்டுவிடுமா? பெரியோர் வார்த்தையை யார் மதிக்கிறார்கள்? எல்லாம் பட் டால்தானே தெரியும்!" என்றார் பொங்கும் கோபத்துடன் ரங்கநாதஞ் செட்டியார்.

"என்னவோ வைத்தார்கள், தலை கொழுத்துப்போய் பேசினார்கள், ஆண்டவனின் ஜீவனும், மகிமையும் தொலை ந்தது; நம்ம வியாபார வெட்டிகளும் நாசமாயிற்று. இனி மேலாவது அந்த நாஸ்திக மாணிக்கம், சுப்பிரமணியம் முத லானவர்களைக் கூப்பிட்டு, தகுந்த புத்திமதிகளைச் சொல்லி, சங்கத்தைக் கலைத்துவிட்டு, எல்லாவற்றையும் ஒரு ஒழுங்கு படுத்தி, கும்பாபிஷேகம் நடப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னார் பாலசுந்தரம்.

"நாம் இரண்டொருவர் சொன்னால் அந்தப் பயல்களி டம் ஒன்றும் நடக்காதையா! மறுபடியும் நம்ம சாதிக் கூட் டத்தைக் கூட்டவேண்டும், அவன்களை இழுத்துவந்து சரி யான புத்தி கற்பிக்கவேண்டும். மேலும் கும்பாபிஷேக சமாச் சாரம் முடிவு செய்யப்பட வேண்டுமல்லவா? குறைந்தது 3000 ரூபாயாவது பிடிக்குமென்று சொல்லுகிறார் குருசுவா மிகள். செலவைப் பார்ப்பதில் பயனில்லை, கந்தய்யனை இப் படியே விட்டு வைத்திருந்தால் நம்ம சாதியே நசித்துப்போகு மென்று சொல்லுகிறார். சுபம் சீக்கிரம், அடுத்தவாரமே ஆரம்பித்துவிடவேண்டும்" என்று முடித்தார் உற்சாகத் துடன் ரங்கநாதஞ்செட்டியார். பழம் பெருமை நிறைந்த அவரது உள்ளம் கட்டுக்கடங்காமல் குதித்தது!

ஒரு பக்கமாக உட்கார்ந்து, இந்த சம்பாஷணையை கவ னித்துக்கொண்டிருந்த சேகர், செட்டியார் வெளியே சென்ற தும், மெதுவாகத் தந்தையிடம் சென்றான்.

"ஏப்பா! சாமிக்கு உயிர் உண்டுபண்ண 3000 ரூபா செல்லுமா? உயிர் வந்துட்டா நம்மோடெல்லாம் அது பேசுமாப்பா? அப்புறம்....." இன்னும் என்னமோ கேட்கலாமென்று வாயெடுத்தவன் தந்தையின் முகத்தைப் பார்த்ததும் அப்படியே நிறுத்திக்கொண்டான்.

பாலசுந்தரத்தின் சிவப்பேறிய கண்களிலிருந்து கிளம்பிய "கோப நெருப்பு" சிறுவன் சேகரை திக்குமுக்கலாடச் செய்துவிட்டது! அவன் உள்ளம்பெரு நடுக்கம் கொண்டது. எதிரில் நிற்க மாட்டாமல் நகர்ந்து விட்டான். மூடத்தனம் அங்கு சிரித்தது காலத்தை உணராமல்!

5.

சோமநாத குருக்கள் கந்தசுவாமி கோயிலின் பரம்பரைப் பூசாரி வழியில் வந்தவர். அலமு அவரது ஒரே தங்கை, பால்ய விதவை, வயது 24-தான். கட்டுமஸ்தான தேகம் படைத்தவள். அவள் பேரழகி யல்லவாயினும் அவளது கண்களில் தோன்றும் மோகப் பார்வை கல் நெஞ்சையும் கரைத்துவிடும். அவள் கணவனை யிழந்ததை மறந்து விடப் பல சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தாள். ஏன்? மறந்து விட்டாளென்றே சொல்லலாம்.

சோமநாத குருக்கள் வீட்டிலே "கிளப்பு"களைப்போல் சாப்பாடு போடுவது வழக்கம். தினம் பல வெளியூர்க்காரர்கள் சாப்பிட வருவார்கள். அந்த வகுப்பினருக்கு மட்டும் வரும்படிக்கு எத்தனை வாசல்!

அவன் ஒரு "பஸ்" ட்ரைவர். உடல் முறுக்கேறிய சுந்தர வாலிபன், சென்ற சில மாதங்களாக குருக்கள் வீட்டில் தான் சாப்பிடுகிறான். அலமுவின் மோகப் பார்வை எப்படியோ அவனை அடிமைகொண்டு விட்டது. சில நாட்களாக இருவரது கண்கள் மட்டும் பரஸ்பரம் சந்தித்துப் பழகின. பின்னர் வாய் உறவு, அதுவும் முற்றி உடலுறவாக மாறிவிட்டது. அப்புறம்.....சொல்லணுமா? சையத் பாக்ஷா குருக்கள் வீட்டுத் திண்ணையிலேயே ராப்படுக்கை போட்டுவிட்டான். சோமநாத குருக்களுக்கு அவன் மீது சந்தேகமே தோன்றவில்லை. வீட்டுக் காவலாளியைப்போல் இரவில் தன் வீட்டைப் பாதுகாக்கும் அவனது பிராமண

பக்தியை மெச்சிக்கொண்டார். பாக்ஷாவுக்கு நிரம்ப சவுகரியம்.

அவன் தாழ்வாரத்தில் சாப்பிட உட்கார்ந்தான். வழக்கத்திற்கு மாறாக கொஞ்சங்கூட உற்சாகமில்லாமலும், பேசாமலும் பரிமாறினாள் அலமு. சையத் பாக்ஷாவின் மனதில் விழுந்த சந்தேகம் வலுத்துவிட்டது. அவளை ஏறிட்டுப் பார்த்தான், அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள். அவனிடம் பேசவே யில்லை. அவள் மனம் எங்கேயோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது.

"சரிதான், ராத்திரி 12 மணிக்கு மேல் கந்தவனத்திலா? பேஷ்! நல்ல குரு! அலமு! எனக்கு செய்யும் துரோகத்தை அனுபவிப்பாய்" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான் சையத்பாக்ஷா. குருவின் பூஜையறையின் வெளியிலிருந்து தான் கேட்டதை நினைக்க நினைக்க அவனுக்குச் சாப்பாடு செல்லவில்லை. எழுந்து கையலம்பிக்கொண்டு அலமுவை அருகில் அழைத்தான். அவள் வேண்டா வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு சற்று தூரமாகவே விலகி நின்றாள். அவளது நடவடிக்கை முகத்திலடித்த மாதிரி யிருந்தது அவனுக்கு, அவன் ரோஷக்காரன்.

"இங்கே பார் அலமு! என்மேல் என்ன வருத்தம்? ஏன் பேசமாட்டேங்கறே? ஏதாவது புதுக்கிராக்கி வந்திடுச்சா?" என்றான் கிண்டலாகவும், சற்று கோபத்துடனும்.

"பாக்ஷா! பார்த்தையா உன் ஈனப்புத்தியை காண்பிக்கறயே, என்னை என்ன விபசாரி யென்றா நினைத்து விட்டாய்? உன் சாவகாசம் வைத்தது தப்பு, நான் உனக்குப் பெண்டாட்டி மாதிரி நடந்துகொண்டிருந்தும், கொஞ்சம்கூட யோசனையில்லாமல்....." அதற்குள் அவசரமாக யாரோ அங்கு நுழைந்தனர், அந்தச் சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைத்தாற்போல, பேச்சு நின்று விட்டது.

சோமநாத குருக்களிடம் என்னவோ அவசர வேலையாக வந்த பாலசுந்தரம் தாழ்வாரத்தில் சையத்பாக்ஷாவும், அலமுவும் நின்று பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும்,—இல்லை, கேட்டதும், அப்படியே அசைவற்று நின்றுவிட்டார். பலப் பல நினைப்புகள் அவர் மனதில் புகுந்துவிட்டன. அவரது

குருட்டு மதபக்திக்கு ஒரு முரட்டுச்சோதனை! பிராமண பக்திக்கு ஒரு சவுக்கடி!

6.

அந்தப்பெரிய தோப்பும், அழகிய நந்தவனமும், கோயிலுக்குச் சொந்தமானவை. வானத்தையளாவும் தென்னை, மா, பலா, கமுகு முதலிய விருட்சங்கள் பகலை இரவாக்கும் அளவுக்கு செழிப்பு வாய்ந்தவை. சகலவித பூஞ்செடிகளும் நந்தவனத்தைப்புஷ்பங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தன. தோப்பிலே அடிக்கடி திருட்டு நிகழ்வதால், 4 முரடர்களை அதற்குக் காவலாகப் போட்டிருந்தனர். "கோயில் சொத்தைத் தின்பவன் பெரும்பாதகன், எனவே திருடன் பிடிபட்டால் தகுந்த முறையில் தண்டனையளிக்க வேண்டும்" என்பது கோயில் நிர்வாகிகளின் கட்டளை.

அந்தக் காவலாளிகள் நால்வரும் சையத் பாகூஷாவுக்கு நன்றாகத் தெரிந்தவர்கள். எனவே அன்று அவன் தயவால் அவர்கள் வயிறு "சுர" பானத்தால் நிரம்பியது. குடித்து வெறித்துக்களித்தனர்.

∴ ∴ ∴

வானத்திலே ஊர்ந்த மேகப்படலங்கள் சந்திரிகையை மறைத்து விட்டன. எங்கும் கருக்கலிருட்டு; குருக்கள் வீட்டு ஓட்டைக் கெடிகாரம் 12 மணி அடித்தது. யாவரும் அயர்ந்த நித்திரையிலிருந்தனர், ஆனால் அந்த இரண்டு பிரகிருதிகள் மட்டும் கண்ணயரவில்லை. அவரும் அவளும் மெதுவாக எழுந்தனர். சத்தம் போடாமல் வீட்டுப்புழைக்கடை வாசலையடைந்தனர். அங்கிருந்து பார்த்தால் நந்தவனமும் தோப்பும் நன்றாகத் தெரியும், சுமார் 30 கஜ தூரந்தானிருக்கும், வாசற்படியைத் தாண்டினர். அப்பொழுது வீட்டிற்குள்ளிருந்து வந்த பாட்டியின் "லொக்கு லொக்" கென்ற இருமல் குரல் அவர்களைத் திடுக்கிட வைத்தது. அவுசாரித்தனத்திற்கு ஆண்மையேது?

அவள் அவர் காதுக்குள் மெதுவாகச் சொன்னாள்; "பார்த்தீர்களா! இந்த இழவுக்குத்தான் வீட்டில் கூடாதென்றேன், பாட்டிக்குக்காச கோய், இரவு முழுதும் தூங்குவதேயில்லை, நடமாடிக்கொண்டே இருக்கும். நந்தவனத்திலென்றால், அங்கு யார் வரப்போகிறார்கள்? நல்ல நிம்மதி" அவர் முகம் மகிழ்ச்சியைக் காட்டிற்று. சுற்றுமுற்றும் பார்த்துக்

கொண்டே நந்தவனத்தையடைந்தனர். வேலியைத்தாண்டி உள்ளே நுழைந்தனர். நந்தவனம் "விரி"ச் சென்றிருந்தது. எவ்வித சந்தடியுமில்லை.

நடுவில் ஒரு பெரிய தாமரைக்குளம், அதன் கரையில் ஒரு அழகிய நாற்கால் மண்டபம். அலமுவுக்கு அந்த இடமெல்லாம் பழக்கமானவை. இருவரும் உட்கார்ந்தனர், அந்த மேடை மீது. பலவித புஷ்பவாசத்துடன் குளிர் காற்று "சிலு சிலு"வென்று வீசியது. வானம் இருண்டுக்கொண்டு வந்தது, மழைக்குறி தோன்றிற்று மரம் செடிகள் காற்றால் அசைவது பேய்கள் ஆடுவதுபோலிருந்த பாவம் அவர் மனதில் திகில் விழுந்துவிட்டது. அச்சம் உச்சிக்குடுமியைப் பிடித்து உலுக்கியது;

"அலமு! பெண்புத்தி பின் புத்திதான். இந்த அனாதரவான இடத்தில் திடீரென்று யாராவது வந்துவிட்டால்?" அவரது குரல் நடுங்கியது.

அப்படிச் சொல்லாதீர்கள், இந்த நல்ல சமயத்தில் பயங்கொள்ளலாமா? யாரும் வரமாட்டார்கள்" என்று சொல்லி அளவற்ற ஆர்வத்தோடு அவரைக்கட்டித் தழுவிக்கொண்டாள் அலமு. சற்று நேரத்தில் அவர்கள் இன்பக்கேணியின் ஒவ்வொரு படியையும் தாண்டி உள் சென்றுகொண்டிருந்தனர். பின்னர் அதிலேயும் மூழ்கியும் விட்டனர்!

திடீரென்று நான்கு முரடர்கள் கைகளில் தடியுடன் எங்கிருந்தோ முளைத்துவிட்டனர்! "நாய்ங்களே! புருஷனும் பொண்டாட்டியும் சேர்ந்து மாங்காயும் தேங்காயும் திருடுவதில்லாமே, இந்த வேலையுமா ஆரம்பிச்சுட்டீங்க? சாயபு சொன்னது சரியாப்போச்சு! வெளுடா அண்ணே களுதையுங்களே" என்று சொல்லிக்கொண்டே ஒருவன் தடியைச்சுழற்றினான். மற்றவர்களும் அவனைப் பின்பற்றினர்.

அந்தோ! அவர்கள் பாடு வில விலத்துவிட்டது. குய்யோ முறையோவென்று கத்தினார்கள். ஆனால் அந்த முரட்டுக்காவலாளிகளின் காதில் அந்த சப்தம் ஏறவில்லை. பலநாள் திருடர் பிடிபட்டார்களென்று "தப்பு திப்பெ"ன்று வைத்துவிட்டார்கள். பின்பு இருவரையும் ஒன்றாகப்பிணைத்து ஊர்ச்சாவடிக்கு இழுத்துச்சென்றனர். அங்கு ஒரு தூணில் இருவரும் கட்டிப்போடப்பட்டனர். சாமிசொத்

தைத் தின்பவருக்குச்சரியான தண்டனையல்லவா விதிக்க வேண்டும்! அதற்குத்தான்.

நன்றாக இருட்டி விட்டது. மழையும் 'பிசு பிசு' வென்று தூறிக்கொண்டிருந்தது. அந்த அமர்க்களத்திலே, அந்த நேரத்திலே சாவடியில் ஒரு பெரிய குற்பல் சேர்ந்து விட்டது. கள்வர்களை இன்னாரென்று தெரிந்து கொள்ளாமலேயே பலரும் பலவிதமாகப் பேசவும், காறி உமிழவும், அடிக்கவும், உதைக்கவும் செய்தார்கள்.

ஊரே திரண்டு விட்டது, பாலசுந்தரமும், ரங்கநாதனுஞ் செட்டியாரும் சப்தங் கேட்டு ஆளுக்கொரு லாந்தரைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்தனர். கூட்டம் வழி விட்டது. இரண்டு லாந்தர்களும் தூணில் பிணைக்கப்பட்டிருந்தவர்களின் முகத்திற்கு நேராக உயர்த்தப்பட்டன. "என்ன ஆச்சரியம்! நம்ம குல குருவும் குருக்கள் வீட்டு அலமுவுமா?"

நேற்று முன்தினம் நித்தியானந்த சொரூபியாக, பக்தர்கள் பாதத்தில் விழுந்து பணிய பீடங்கொண்டிருந்த அதே பூர்மத் குமரகுருபர சுவாமிகள்தான் இன்று.....ஆ! என்னே! காலத்தின் வேகமான கோலம்!!

யாவரும் வாயைப் பிளந்துக்கொண்டு அப்படியே நின்று விட்டனர்! ஒரு புறமாக நின்று இந்தக் காட்சிகளைக்கண்டு சிரித்துக்கொண்டிருந்த "காதகனாக மாறிய காதலன்" சையத் பாகூஷாவுங்கூட மனமிளகினான். தனக்கு துரோகம் செய்தவளென்றாலும் முன்பு தன்னிடம் அலமு கொண்டிருந்த ஆசையை நினைத்தபோது அவன் மிகவும் வேதனையடைந்தான். தனது மடமையை நொந்து கொண்டான். உண்ட சோற்றுக்கு ஊறுகாய் தேடுவதில் என்ன பயன்?

(7)

மறுநாள் காலை மணி 10 இருக்கும். பாலசுந்தரத்தின் வீட்டில், அவரும் ரங்கநாதனுஞ் செட்டியாரும், சோமநாத குருக்களும் வீற்றிருந்தனர். அவர்கள் முகங்களில் வெட்கம், துக்கம், அவமானம், எல்லாம் தேங்கி உறைந்து கிடந்தன! பிரேத மௌனம் அங்கு குடிகொண்டிருந்தது.

குருக்கள் மெதுவாக ஆரம்பித்தார். "பாலு! இந்த அக்கிரமம் எங்காவது உண்டா? வாஸ்தவத்திலேயே சுவாமிகளும், அலமுவும் ஒரு பாவமும் அறியார்கள். இதெல்லாம் யாரோ போக்கிரிகள் வேணுமென்றே செய்த வேலை. அந்தக்காவலாளிகள்தான் இப்படி அடிக்கலாமா? அவமானப்படுத்தலாமா? மாணிக்கம், சுப்பிரமணியம் முதலான குருத் துரோகிகளையும், அந்த மூடர்களையும் நீங்கள் ஏன் தடுக்கக்கூடாது? இதுதான் உங்கள் பிராமண விசுவாசமா? உங்கள் முன்னோர்களாயிருந்தால் இந்நேரம் அந்தப் பயல்களை என்ன 'சின்னப்' படுத்தியிருப்பார்கள் தெரியுமா? நீங்களெல்லாம் கோழைகள், குருபக்தியற்றவர்கள்!" என்று பரிதாபத்தில் ஆரம்பித்து கோபத்தில் முடித்தார் சோமநாத குருக்கள். அவர் பேச்சிலே ஆத்திரம் பொங்கி வழிந்தது!

"சுவாமி! உங்களுக்காக வாஸ்தவத்தில் நான் வருத்தப்படுகிறேன். வீணாக ஊரிலிருப்பவர்களையும், காவலாளிகளையும் குறை சொல்வதில் பயனில்லை. ஊரே கேட்கிறது; "அந்த நேரத்தில் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அங்கென்ன வேலை?" யென்று. நாங்கள் என்ன செய்வது? பிராமண விசுவாசம் வேண்டியதுதான், ஆனால் நேற்று மத்தியானம் ட்ரைவர் சையத் பாஷாவும், உங்கள் தங்கை அலமுவும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டது முதல், என் மனம் என்னமோ போலாகி விட்டது. மேலும் வெடி குண்டு போன்ற இந்தச் சம்பவம் என்னை முக்கால் நாஸ்திகனாக்கி விட்டது. என்ன செய்வது; எல்லாம் காலத்தின் போக்கு!" என்றார் மிகுந்த சலிப்புடன் பாலசுந்தரம்.

"என்னவிருந்தாலும் இது மோசமான காரியம்; அவர் பேச்சையும், உங்கள் பேச்சையும் நம்பினால் அவமானம் எங்களுக்குத்தான், நல்லவேளை, கும்பாபிஷேகம் தொடங்கின பின்பு இந்தக் "கண்ட்ராவி"கள் நடந்திருந்தால் வெளியே தலை நீட்டமுடியாத மானக்கேடு சம்பவித்திருக்கும். இதுவே பரவாயில்லை. பணமும் மிச்சம் பாருங்கள்" என்றார் நேற்று மாலை வரைக்கும் பச்சை வைதீகராயிருந்த ரங்கநாதஞ்செட்டியார்.

குருக்களின் முகத்திலே கரியைப் பூசிவிட்டமாதிரியிருந்தது. அவர் மனதிற்குள் கடும்புயல்! பெரிய வேக்காடு! அவரது கும்பாபிஷேக மனக்கோட்டை "தபதப" வென்று சரிந்து விழுந்தது.

அதே சமயத்தில் கையில் ஒரு கத்தை துண்டுப் பிரசுரத்துடன் சேகரும், செல்வனும் அங்கு வந்து சேர்ந்தனர். சேகர் பிரசுரத்தை எல்லாருக்கும் விநியோகித்தான். அது உள்ளூர் சுயமரியாதைச் சங்கத்தின் அன்றைய வெளியீடு.

குலகுருவால் நலமில்லை.
தோழர்களே விழித்தெழுங்கள்.

என்ற தலைப்பின் கீழ், தெய்வீக, மத நம்பிக்கைகளால் வரும்கேடுகளையும், பழமையின் பெயரைச்சொல்லி பகற்கொள்ளையடிக்கும், மடாதிபதிகள், ஆச்சாரிகள், லோககுரு, குலகுரு முதலானவர்களின் பித்தலாட்டங்களையும், அவர்களைப் பணிந்து காசு கொடுத்து கம்மனாட்டிப்பட்டம் வாங்கும், தமிழர்களின் அறியாத் தன்மையையும், தன்றாக விளக்கிக் காட்டப்பட்டிருந்தன.

பாலசுந்தரமும் படித்துப் பார்த்தார். ஆனால் இப்பொழுது அவர் சேகரை முறைத்துப் பார்க்கவுமில்லை, கோபங்கொள்ளவுமில்லை. சேகர் அவர் முன்னால் உட்கார்ந்து கொண்டு, அவர் முகத்தை நோக்கினான். அவன் கண்களில் என்ன எழுதியிருந்ததோ தெரியவில்லை, அவர் முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டார். வெட்கம்!

"ஏப்பா! அவர் பெரிய ஞானம், நல்லொழுக்க போதகர், என்றெல்லாம் சொன்னீர்களே; அதெல்லாம் என்னவாயிற்று? செல்வன் சொன்னது தானே நிஜமாப்ப் போய்விட்டது; என்னமோ, காணிக்கைப்பணத்தோடு திருத்தியடையாமல், கும்பாபிஷேகம் கிம்பாபிஷேகமென்று சொல்லி வந்தவரைக்கும் பணத்தைக் கரந்துகொண்டு, சுயமரியாதைச் சங்கத்தையும் ஒழித்துவிடப்பார்த்தான். அவன் செய்கையால் அவனே ஒழிந்தான். பார்ப்பனீயத் திமிரும் வெடித்தது! நம்மைப்பிடித்த பீடையும் ஒழிந்ததென்று சந்தோஷப்படுங்கள்!" என்றான் சேகர் குதூகலத்துடன், அந்தச் சிறுவன் வதனத்திலே ஒரு பெருமையுணர்ச்சி!

"அடேய்! என்னடா பெரியவர்களை மரியாதையில்லாமல் பேசுகிறாய்?" என்று அதட்டினார் பாலசுந்தரம். பெருங்காயம் வைத்திருந்த பாண்டமல்லவா? மணம் போகவில்லை.

அதற்கெல்லாம் அவன் அஞ்சுவதாகக் காணோம். நிதானமாகவும், அழுத்தமாகவும் சேகர் கேட்டான்;

"யார் பெரியவர்? பெரியவரென்றால் எப்படியிருக்கவேண்டும்?"

அந்தக் கேள்விக்குப் பதிலென்ன? ஒரு நெடிய "மவுனம்!"

மதமும் அதன் போதனையும்.

(கைவல்யம்)

நமக்குச் சுயராஜ்யம் வருவதிலும், நமது பணத்தை நாமே நமக்கு வேண்டிய செலவு செய்துகொள்ளுவதிலும்இன்னும் மற்றெல்லா ராஜ்ய விவகாரங்களிலுள்ள பொறுப்புகளெல்லாம் நமக்குக்கிடைப்பதிலும் சுயமரியாதைச் சங்கத்தார்களுக்கு ஆசையில்லாமலில்லை. அதற்கெதிரிடையாக இருப்பதுமில்லை. என்றாலும் நாம் சுயராஜ்யத்தை இழந்து விட்டதற்கு காரணமாயிருந்தவைகளை நீக்கி இனிச் சுயராஜ்யம்வருவதற்குள்ள வழிகளைச் செம்மைப்படுத்தி விட வேண்டுமென்பதே அவர்கள் ஆசை.

நாம் ராஜ்ய விவகாரங்களில் முற்போக்கடையாமலிருப்பதற்கு நம்முடைய ஜாதி ஆசாரங்களும், சமயக்கொடுமைகளும், உலகப் பொதுவிதியை உல்லங்கனம் செய்யும் அறிவற்ற தன்மைகளும் காரணமென்று நம்பேரில் சினேகிதமுடையவர்களும், நமது தேசத்தில் பற்றுதலுடையவர்களுமான அந்நியர்களும் சொல்லுகிறார்கள். ராஜ்யபாரத்தை நடத்திச்சென்ற பெரிய அதிகாரிகளும் அப்படியே சொல்லிப்போனார்கள். ராஜ்ய விவகாரங்களில சம்பந்தப்பட்ட நம்மவர்களும் அதையே பலதரம் வற்புறுத்தியுமிருக்கிறார்கள். இவர்கள் சொன்ன அவ்விஷயங்களெல்லாம் நமக்குப்பிரத்தியக்ஷ அனுபோகங்களாக விருப்பதாலும், அதில் நாம் சீர்திருத்தமடையாவிட்டால் சுயராஜ்யம் வருவதிலும் வந்ததிலுள்ள தொந்திரவுகளிலும் இடையூறுகள் இருந்துகொண்டே யிருக்குமென்பதை சுயமரியாதைக்காரர்கள் உணர்ந்தே, முதலில் சமூகக்கொடுமைகளும், சமய அநீதிகளும் போய் சமூகங்கள் சீர்திருத்தமடைய வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

மதத்தின் உண்மைத்தத்துவத்தை சுயமரியாதைக்காரர்கள் அறியார்கள் என்று மட்டும் சொல்லிவிட்டால் போது

மா? மதத்தினால் உண்டான கொடுமைகளையும் அநீதி களையும் கவனித்துப்பார்க்க வேண்டாமோ? மதத்தினால் பல கொடுமைகளும் அநீதிகளும் உண்டாயிருக்கிறதென்று அனேக தரம் எடுத்துக்காட்டினோம். அந்த அநீதிக்கும் கொடுமைக்கும் மதத்திலுள்ள தத்துவார்த்தங்களை தெரிந் தவர்களோ, சாஸ்திரிகளோ, பண்டிதர்களோ இதுவரையி லும் அதற்குள்ள தத்துவங்களைச் சொல்லவில்லை. சொல் லுவார்களானால் அதைச்சான்ன கடவுளையும் கடவுளைக் கண்ட பெரியவர்களையும் அதன் அர்த்தத்தை கண்டுபிடித்த பண்டிதரையும் நாங்களும் தெரிந்துகொள்ளுவோம்.

மதமென்பது வாய்ப்பேச்சல்ல; கொள்கைகளும் ஒழுங்க ளுமல்ல; ஜாதியையும் ஜாதி ஆசாரங்களையும் பற்றியதுமல்ல. மதமென்பது உயர்ந்த ஜாதி என்பவர்களைப்பற்றி கொண்டு மற்றவர்களை தாழ்ந்த ஜாதியார்களாகமதித்து தீங்கிழைத்து கீழாக்கிவைப்பதில் வாழ்ந்துகொண்டிருப்பதுமல்ல. ஆத்மா விற்கும் கடவுளுக்குமுள்ள சம்பந்தமே மதம் என்றால் அதை உயர்ந்த ஜாதியாகவும், தாழ்ந்த ஜாதியாகவும் செய்ய எப்படி முடியும்? அப்படிச் செய்ததினாலேயே வியாபார தோரணை யில் வந்துவிட்டது. வியாபார தோரணையில் வந்து விட்ட மையாலே ஆத்ம அறிவு நாசமடைந்து கொடுமைகளும் அநீ திகளும் உண்டாய்விட்டனவென்று சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள். அதை நீங்களே ஆலோசித்துப்பாருங் கள்.

புஸ்தகங்களிலும், வார்த்தைகளிலும், உபந்நியாசங்களி லும், எழுத்துக்களிலும் மதத்தைக்கண்டுபிடிக்க முடியாது. மதமென்பது அனுபோகத்தில் தானிருக்கிறது. மதத்தை அனுபவத்திற்குக்கொண்டு வருவதற்கு முதற்படியாகப் பற் றின்மையை அப்யசிக்க வேண்டுமென்றே மதத்தின் உண் மைத்தத்துவங்களெல்லாம் சொல்லுகின்றன. இருளும் ஒளி யும்போல உலக ஆசையும் கடவுளைப்பற்றிய ஆசையும் சேர்ந்து நில்லாவென்றே கடவுளை அடையப்போனவர் களெல்லாராலும் சொல்லப்பட்டிருக்கின்றன. கடவுளை வணங்கும்போது உலகபோகங்களிலும் முழுகியிருக்க முடி யாதென்றே மதத்தின் நிச்சயங்களெல்லாம் சொல்லுகின்றன. 'அருள்பழுத்தபராபரமே, நிராசையின்றேல் தெய்வமுளதோ' என்றும், 'ஆசையற்றவிடம்' சிவம் என்றும், 'வேதத்தின் சம்மதம் சகலமும் தவிர்வதே கருத்தாகும்' என்றும் சொன் னார்கள், சமயத்தையுணர்ந்த பெரியவர்கள்.

மதங்களினுள்ளிருக்கும் வித்தியாசங்கள் என்று நாம் கேள்விப்படுகிற, நம்புகிற விஷயங்களனைத்தும் மூட பக்தியின் தொகுதி யென்றே சுயமரியாதைக்காரர்கள் நினைக்கிறார்கள். ஒரே ஒரு கடவுள் எல்லோருக்கும் அபயமளிக்கிறார் என்பது உண்மையானால் எல்லோருக்கும் கடவுள் சமமென்பதிலும் சமமாகவே இருக்கவேண்டுமென்பதிலும் குற்றமென்ன? ஆத்மாவை சிறிதளவு ரக்ஷிப்பதற்காவது முக்தி கொடுப்பதற்காவது நீங்களோ நாங்களோ அல்லது எந்த கூட்டத்தார்களும் ஜவாப்தாரிகளல்லவென்றும் சர்வ சக்திகளுமுடைய கடவுளே எல்லோருக்கும் ஜவாப்புதாரியென்றும் மதத்தின் தத்துவங்கள் சொல்லுகையில், கடவுளிடம் நம்பிக்கை வைத்திருப்பதாகச் சொல்லும் ஜனங்கள் "கடவுள் ஒரு சிறிய கூட்டத்தாருக்கு மாத்திரம் எல்லா உண்மைகளையும் தெரிவித்திருக்கிறார்" என்றும், "அவர்களே ஆத்மாவைத் தெரிவதற்கும் கடவுளை நேரில் காண்பதற்கும் பாத்தியதையுடையவர்க"ளென்றும் "அவர்களே மற்றவர்களை கடவுள் அருளால் ரட்சிக்க வந்தவர்க"ளென்றும், நம்புகிறவர்களை மூடநம்பிக்கையுடையவர்களென்றும், மதப்புரட்டால் ஏமாற்றமடைந்தவர்களென்றும் பொய்யான புராணக்கதைகளை நம்பி மதத்தின் பொருளறியாமல் தன் புத்தியின் சிந்தனாசக்தியைக் கெடுத்துக் கொண்டவர்களென்றும் சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

பலவித மூடநம்பிக்கைகளிடமும், புத்தியில்லாதவர்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்காகக் கடவுளிற்குப் பிரதிநிதியாகச் சொல்லிக்கொள்ளுகிறவர்களிடமும் மதத்தின் பேரால் வித்தியாசப்படுத்தி நடத்தப்படும் கொடுமைகளிடமும், உயர்ந்த ஜாதியென்ற ஆணவத்தினிடமும், ஆசாரத்தில் உயர்ந்து அனுஷ்டானத்தில் தேர்ந்து நித்தியகர்மத்தை நிவேத்தியத்தில் முடித்து கடவுள் பிரசாதத்தையும் பெற்று விட்டோம் என்று பேசிக்கொள்ளும் பெருமைகளிடமும் மதம் வாழாது. மதமென்பது நம்புவதற்காக மாத்திரம் பிரயத்தனம் செய்வதல்ல. இருட்டிலே தடவிக்கொண்டு பாடுபட்டுத் தேடின பொருளையெல்லாம் பார்ப்பானுக்குக் கொடுப்பதுமல்ல. முன்னோர்களின் வார்த்தைகளையெல்லாம் கிளிப்பிள்ளைகளைப்போல மனனம் செய்துகொண்டிருப்பதுமல்ல. இவைகளையே மதமென்று நினைத்து, நடந்து, வாயில் மத உண்மைகளைப் பேசி மதத்தால் ராஜரீக விஷயங்களை முடித்துக்கொள்ளலும் மதமாகாது. இந்திரி

யங்கள் எவ்விடம் சென்றாலும் மனம் அதன் பின்செல்லாமல் தானும் கெட்ட எண்ணங்களை நினைக்கும் சக்தி முழுமையும் நன்றாக இழந்து பற்றுதலை விட்டு யோக்கியதையும் கண்டோர் நடுங்கும்படியானபரிசுத்தத்தன்மையும் வந்தவிடத்தில்தான் மதம் விளங்கும். பற்றின்மை ஒன்றினால் மாத்திரம் அழியாத் தன்மை அடைபடும் என்று இந்து வேதங்களெல்லாம் சொல்லுகின்றன. "உன்னிடமுள்ள சகலத்தையும் விற்று ஏழைகளுக்கு உதவிவிட்டு என்னைப் பின்பற்று" என்று ஏசுகிறிஸ்துவும் சொல்லுகிறார். 'உன் பற்றொழிய ஒரு பற்றுமில்லை உடையவனே" என்றார் பட்டணத்தாரும்.

மதத்தின் உயர்வு பற்றின்மை. பற்றின்மையால் மதம் விளங்கவேண்டும். பற்றின்மையைப் பாட்டால் மற்றவர்களுச் சொல்லித் தன் வயிறு வளர்ப்பதில் மதம் வந்துவிட்டது. வயிறு வளர்ப்பில் தடைவராமலிருக்க அதற்கு இசைந்தவாறெல்லாம் மதத்திற்கு அர்த்தங்களும் கதைகளும் எழுதப்பட்டன. இந்தக் கதைகளும் அர்த்தங்களும் மதமாகிவிட்டது. பற்றின்மை குறைந்துவிட்டது. அதனால் இந்திரிய விவகாரங்களே மதங்களாகிவிட்டன. இந்திரிய போகங்களுக்கு மதத்தை அனுகூலப்படுத்திக்கொண்டமையால் ஆத்ம ஞானம் மழுங்கி கொடுமைகளும் நியாயவிரோதங்களும் மூட நம்பிக்கைகளோடு முடிந்து வயிற்றுப்பிழைப்புக்கு வழிகளாய்விட்டன. அதனுண்மைகளைச் சொல்லி உண்மைகளல்லாதவைகள் அழிந்துபோக வேண்டுமென்றால் அவர்களெல்லாம் சுயமரியாதைச் சங்கத்தைக் குற்றம் சொல்லுகிறார்கள்.

"அபிப்பிராயங்கள், கொள்கைகள், ஜாதிகள் முதலியவைகளைப்பற்றிக் கவனியாதேயுங்கள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளிருக்கும் சாரமான சத்பொருளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவைகளில் ஒன்றுமில்லை யென்றே சொல்லலாம்" என்று சுவாமி ராமகிருஷ்ணர் சொன்னபடியும், "அடியும் முடியுமில்லா செயப்படா உணர்வே தெய்வம்" என்று வசிட்டர் உபதேசித்தபடியும், ஒருவன் மதத்தின் உண்மையை அடைவதற்கு யாதொரு கர்மமாவது, சமயக் கோட்பாடாவது, ஜாதியாவது, ஒருவிதக் கொள்கையாவது அவசியமில்லை யென்றும், ஞானம் ஒன்றே போதுமென்றும், கடவுளைக் காண்பதற்கு ஜாதியாவது கோத்திரமாவது குருக்

களாவது வேண்டுவதில்லை என்றும், சங்கராச்சாரியே சொல்லியிருக்கிறபடியும் அந்த சத்பொருளின் சக்தியை அதிகரித்துக்கொண்டு மற்றெல்லா வகைகளையும் தள்ளிவிடவே சுயமரியாதைச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

உண்மை நடக்கையும் சத்திய நெறியும் அன்பான இரக்கமும் உண்டாகி பற்றுதலை யெல்லாம் விட்டு ஆத்மாவைத் தெரிந்துகொள்ள மதம் உபதேசித்திருக்குமா? அல்லது தான் மட்டும் உலக போகங்களை அனுபவித்துக்கொண்டு மற்றவர்களை அதில் பிரவேசிக்க விடாமல் தடுத்துத் தள்ளி கொடுமையும் ஓர வஞ்சனையும் செய்வதற்கு மதம் உபதேசித்திருக்குமா? என்பதையும் ஆலோசித்துப் பாருங்கள். நியாயத்தில் ஒத்துக்கொண்டு காரியத்தில் தள்ளிவிடுவது மனிதத் தன்மையாகுமா? என்பதையும் நினைத்துப் பாருங்கள்.

பண்டிதர்கள் பெரிய புராணத்தைப்பற்றி பிரசங்கம் செய்கிறார்கள்; சேக்கிழாரையும் நம்பியாண்டார் நம்பியையும் வேண்டியமட்டும் கொண்டாடுகிறார்கள்; சுந்தரமூர்த்தி நாயனார் அறுபத்துமூன்று பெயரையும் கண்டுபிடித்ததைப்பற்றி ஆச்சரியப்படுகிறார்கள். அது என்னப்பன் சிவபெருமான் கூத்தென்றும் அவராலே அடியெடுத்துப் பாடப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். அறுபத்துமூவர் கதைகளைக் கோர்வையாகவும் அதற்கு முதல் நூல் சார்பு நூலென்று பந்தியாகவும் சொல்லுகிறார்கள். அடுக்குகளும் கவித் திறமும் பேரழகும் வாய்ந்த காவியமென்றும் புகழுகிறார்கள். அறுபத்துமூன்று நாயன்மார்களின் கதைகளும் உலகப் பற்றை விட்டு விட்டவர்களின் கதைகளாகவும் விட்டுவிட உபதேசிக்க வந்த புராணமாகவுந்தானே இருக்கிறது? அதை உபதேசித்து விசேடமாகக் கொண்டாடும் பண்டிதர்களில் எத்தனை பேர்கள் உலகப் பற்றை விட்டு சிவன்பால் மனதை வைத்து சிவ சின்னங்களணிந்தவர்களுக்கே சகலத்தையும் ஒப்படைத்து விட்டார்கள்? ஒருவர் பின் ஒருவராகச் சொன்னவைகளையே சேர்த்திச் சேர்த்திக் திருப்பித் திருப்பிப் பெரிய புராண ஆராய்ச்சியென்றும் அறுபத்துமூவர்களென்றும் எழுதிக்கொண்டு வருகிறார்களே, இவர்கள் மனம் உலக வாழ்க்கையிலுள்ள பற்றும் அதற்காக அவதிப்படுவதும் நீங்கள் பார்க்கவில்லையா? உண்மையில் மதத்தின் உண்மை அவர்களுக்குத் தெரிந்து அதில் மனம் சென்றிருந்தால் அவர்கள் இந்நிலையிலிருக்க ஏது உண்டா? இவர்கள் ஆராய்ச்சியும் உபதேசமும் இவர்கள் கால க்ஷேபத்திற்கு மட்டுந்தானா? பண்டிதனுக்கே உபயோகப்படாத அக்

கதைகள் வாலிபர்களுக்கும் உலக சுகங்களை சிறிது அனுபவிக்க வேண்டியவர்களுக்கும் என்ன பலனை யளிக்கும்? பல்வீனத்தையும் ஜீவனற்ற வெறும் பக்திகளையும் கற்பிப்பதினால் என்ன பயனுண்டாகும்? இது காலம் வரையிலும் அவைகளைக் கேட்டு வந்ததின் பயனென்ன? சைவ மடாதிபதிகளுக்குப் பெரிய புராணம் தெரியாதா? அவர்களுக்கு அது பிரமாணை நூலல்லவோ? உலகத்திலுள்ள எல்லா சுகபோகங்களும் அவர்கள் மடத்திற்குள்ளே வேண்டுமென்கிறார்களே? சைவக் குருக்களுக்குப் பெரிய புராணம் சம்மதமில்லாததா? ஒரு நாயன்மாரையாவது பின்பற்றின ஒரு குருக்களாவது எந்த சிவன் கோவில்களிலாவது காண முடியுமா? கைலையிலிருந்தே வந்த சிவபெருமான் கூடவே கைலையிலிருந்து தீட்சதர்கள் வந்தமையால் அவர்களுக்குப் பெரிய புராணம் பிரயோஜனமில்லையா? பிரயோஜனப்படாமையால் தானா பெண்களுக்கு வேலை ஒழிந்த நேரத்தில் விபூதியும் குங்குமமும் மடித்து வைப்பதை ஊர் ஊராய் நடராஜருக்குச் செய்த அர்ச்சனைப் பிரசாதமென்று அனுப்பி, வரும் பணத்தால் அவர்கள் குழந்தைகள் விளையாடும் பொம்மைகளுக்கும் கலியாணம் ஆடம்பரமாகச் செய்து ஆனந்தப்படுகிறார்கள். பின் யாருக்குத்தான் இந்த பெரிய புராணம் தெரிசனை அளிப்பது என்பதை பெரிய புராண ஆராய்ச்சிப் பண்டிதர்களே! சொல்லுங்கள்.

சிவனுக்கடிமை, சிவ சின்னத்திற்கடிமை, குருக்களுக்கும் கோவிலுக்குமடிமை, மடத்திற்கும் மடாதிபதிக்கும் அடிமை, சமயத்திற்கும் சாதிக்கு மடிமை, குருவிற்கும் குருபூசைக்கு மடிமை, சமய ஆச்சாரிகளுக்கும் சந்தான குரவர்களுக்கு மடிமை, இத்தனை அடிமைகளுக்கும் பெரிய புராணம் பிரமாணமாய் நின்று காட்சி அளிப்பதாய் வைத்துக்கொண்டாலும், பெரிய புராணத்திலுள்ள கதைகள் இப்பொழுதுள்ள பினல் கோட்டு சட்டத்திற்கு விரோதமானதல்லவா? சிவபெருமான் திலையிலிருந்து இவ்விடம் வந்து காலமோ அநேகமாகிவிட்டது. சுப்பிரமணியரை உண்டாக்குவதற்கே நூறு தேவ வருடம் போகித்தாராம். நூறு தேவ வருடம் நமக்கு பல சதுர்யுகங்களான கோடான கோடி வருடங்களாகும். அந்தச் சட்டம் சுப்பிரமணியரின் மகன் போகருடைய பிள்ளைகளான வெள்ளக்காரர்களின் காலத்தில் உபயோகப்படுமா? வெள்ளைக்காரர்களின் மிஷின்களையும் ரயிலையும் அவர்கள் ஏற்பாட்டையும் கண்டவுடன் அப்பொழுது நமது புராணம் தெரிந்தவர்கள் வெள்ளக்காரர்களை போகரின் பிள்ளைகளென்று சொல்லுவார்கள். சித்து விசேடமாகக்கற்றவர் போகர்.

ஆகவே இக்கதைகளால் யாதொரு நன்மையு முண்டாவதில்லை; ஒரு சிலர் கன்னத்தில் அடித்துக்கொள்ளவும் சிலர் பக்தியென்று அபிநயித்து ஏமாற்றவும் உபயோகப்படலாமே ஒழிய பக்தியும் வருவதில்லை; பலவான்களாய்-தீரர்களாய்--எதையும் வென்று வருவோராய்--எதையும் பொறுப்பவர்களாய் நமது குழந்தைகள் வளர்வதற்கு உபயோகப்படுவதுமில்லை. மூட பக்தி நம் பிக்கையிலும் ஒரு வித அழகிருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவர்கள் கும்பிடும் தெய்வம் அவ்வழகை ஏற்கவில்லை; கைமாறு தராமல் அவர்களுடைய துயரங்கள் எப்போதும் பெருகுகின்றன. வீண் கிரிகை, மூட பக்திகளுக்கிடையே வளர்க்கப்படும் பிள்ளைகள் இவ்வுலக இன்பங்களுக்குப் பல்லைக்காட்டி யிரந்து உயர்விற்குத் தடைகளும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. ஆனதால் நமது பிள்ளைகளுக்கு மனுஷிய சக்திகளையும் அதை உண்டுபண்ணும் கதைகளையும் உபதேசம் செய்ய வேண்டுமென்பதே சுயமரியாதைக்காரர்களின் கொள்கைகளாகும்.

புத்தியைப் பிரமிக்கச் செய்யத்தக்க பற்பலவிதமான சொற் பிரயோகங்களும் பற்பலவிதமான வியாக்யானங்கள் செய்யும் சாமர்த்தியமும் ஒரு பதத்திற்கு இரண்டர்த்தம் கொள்ளும் இலக்கணத் தேர்ச்சியும் பண்டிதர்களின் இன்பமும் பெருமையுமாகவே நமது நாட்டில் வளர்ந்து விட்டது. அந்தத்தன்னியம் பொருந்திய உரிமைகளைக் காப்பதிலே கருத்தையெல்லாம் செலுத்தி நமது குழந்தைகளுக்கு சமமான தாழ்ந்த வகுப்பினர்களிடம் காட்டவேண்டிய தன்னயமற்ற கடமைகளை பண்டிதர்கள் மறந்தே போய்விட்டார்கள். மோகத்தை எழுப்பி வசீகரம் செய்யத்தக்க பாடல்களைப்பாடுதல், தமோகுணத் தூக்கத்தையே விருத்தி செய்யக் கூடிய இனிய கவிகளைச் செய்து காவியமென்று இசைப்பது, பாமரமக்களை மயக்கனது ருசுவென்று கண்டு அந்தக்காவியங்களைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருப்பது, அந்தகார நிழலையே சிறந்ததென்று புகழ்தல் இவ்வித காரியங்களிலேயே பண்டிதர்கள் காலமெல்லாம் போயிற்று. இந்தக் காலத்தில் கூட பி. ஏ. பி. எல். பாஸ் பண்ணின நம்மவர்கள் கம்பர்கவித்திறத்தைப்பற்றியும் பெரியபுராணை ஆராய்ச்சிபைப்பற்றியும் எழுதிக்கொண்டு வருகிறார்கள். எல்லாரைப் போல நாமும் மோட்டார் ஏறி பங்களாக்கட்டவேண்டுமென்கிற ஆசையும் திறமையும் இருந்தாலுமில்லா விட்டாலும் அடைமழை விட்டும் இவர்களைச் செடி மழை விடவில்லை. அதற்கு யார் தான் என் செய்வது? கம்பராமாயணத்திற்கு கவித்திறமில்லை என்றும், பெரிய புராணத்திற்குக் கவிபழகு இல்லையென்றும் சைவவைணவ புராணங்களல்ல வென்றும் யார் சொன்னார்கள்?

புராணமும் தெய்வீகமும்.

(இங்கர்சால்)

இன்பமே வாழ்க்கையின் நோக்கமும் முடிவுமாகும். இன்பத்தின் தன்மையை நிர்ணயிப்பது அறிவின் செயலாகும். இன்பத்தின் தன்மையை அறிந்து கொண்டபின் அறிவாளிகள் அதனுடன் ஒத்து வாழ்வார்கள். இன்பமென்றால் உண்டு உறங்குவதல்ல. நல்ல ஆரோக்கியத்துடன் யோக்கியமாக வாழ்வதே இன்பமாக வாழ்வதாகும். தன்னலமற்ற காரியங்களைச் செய்வதினாலும், தன் கடமையைத் தடையறச் செய்வதினாலும், நல்ல மார்க்கத்தில் செல்வதினாலும், இயற்கையின் வழியே செல்வதினாலும் உண்டாகும் சந்தோஷமே இன்பமாகும். இவ்விதம் தோன்றும் இன்பமே கவியாகவும் கீதமாகவும் மாறுகிறது.

நியாயமான நல்ல மார்க்கத்தின் முடிவு இன்பமாகும்.

ஆனால் இன்பமாக வாழவேண்டுமென்ற ஆசை இழிவானதென்று எண்ணுவோர் பலர் இருக்கிறார்கள். இத்தகையோர் தங்களை ஞானிகளென்று கூறிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் ஐம்புலன்களை அடக்குவதாகப் பாசாங்கு செய்கி

நம்பியாண்டார் நம்பிக்குப் பிள்ளையார் அறுபத்து மூன்று கதையை எப்படிச் சொன்னார்? என்றும், தன் கூடவந்த அபிமானத்தால் மூவாயிரம் பேர்களுக்கும் அடியேன் என்று பெரிய புராணம் பாட அடியெடுத்துக்கொடுத்த சிவபெருமான், இப்பொழுது தன்னையும் தன் பக்தர்களையும் மதத்தையும் புராணங்களையும் பொய்யென்றும் வீண் கற்பனையென்றும் தூஷிப்பவர்களிடம் 'நீங்கள் செய்வது குற்றம்' என்று என் ஒரு வார்த்தை சொல்லக்கூடாது?

றார்கள். இந்த உலகத்தையும் இந்த வாழ்க்கையையும் அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த உலகத்தில் சுகத்தை அவர்கள் விரும்பவில்லை; மற்றொரு உலகத்தில் இன்பத்தை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவ்வுலகத்தில் சுகம் அவர்களுக்கு தாழ்வுடையதாகிறது. மற்றொரு உலகத்திலோ அது அவர்களுக்கு தூயதாகிறது. "இவ்வுலகத்தில் துன்பத்தைத் தருவது அடுத்த உலகத்தில் இன்பத்தைக் கொடுக்கிறது" என்கின்றனர்.

இத்தகைய ஞானிகளே மதாசாரியர்களாக விருந்தார்கள்; குருக்களாக விருந்தார்கள்; இறைவன் புதல்வராகவிருந்தார்கள்; முனிவர்களாக விருந்தார்கள். இவர்களெல்லாம் உலகத்துக்கு ஒரு சிறிதும் பயன் படாதவர்கள்; அவர்கள் பலர் தொழில் செய்பவில்லை; கைத்தொழில் செய்யவில்லை. பிறருடைய உழைப்பால் அவர்கள் வயிறு வளர்த்து வந்தார்கள். பிறர் அவர்களுக்காகப் பாடுபட்டால் அவர்கள் பிறரைக் காப்பாற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டுவார்கள். ஜனசமூகத்துக்கு இதோபதேசம் செய்பவே கடவுள் தங்களைப் படைத்ததாக அவர்கள் சொல்லிக்கொள்ளுவார்கள். இவர்களே இழிவானவர்கள்; என்றும் துன்பத்தை உண்டாக்குபவர்கள்; அயோக்கியர்கள்; பழி வாங்கப்படுவோர்கள்.

பண்டும் இன்றும் அவர்கள் ஆராய்ச்சிக்கும், சுதந்திரத்திற்கும் சமத்துவத்துக்கும் விரோதியாயிருந்து வருகிறார்கள். இயற்கைக்கு மேம்பட்டதையும், தெய்வீகத்தையும், பொருளாற்றையும் நம்புகிறவர்கள் இவர்களே! குருட்டு பக்தியையும், விரோதத்தையும், பயத்தையும் உலகத்தில் பரப்புகிறவர்கள் இவர்களே! தங்களுடைய கொள்கையைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் எல்லாக் குற்றங்களையும் செய்திருக்கிறார்கள்—எல்லாக் கொடுமைகளையும் செய்திருக்கிறார்கள்.

பெண்டு பிள்ளைகளை நேசித்தவர்களையும், மாடமாளிகைகளைக் கட்டியவர்களையும், காட்டை அழித்துநாட்டைப் பண்படுத்தியவர்களையும், சிற்ப சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவர்களையும், ஓவிய நிபுணர்களையும், உலகத்தில் வித்தைகளை வளர்த்து அன்பைப் பெருக்கியவர்களையும் அவர்கள் உலகப்பற்றுள்ளவர்களென்று வெறுத்தார்கள்.

தன்மதிப்புள்ளவர்களையும், அறிவாளிகளையும், கவிஞர்களையும், நாடகர்களையும், உண்மையை ஒளிக்காமல் விளக்கிய உபன்யாசகர்களையும், மனிதனுக்காக உலகத்தை ஜயித்த வீரர்களையும் இவர்கள் அச்சுறுத்தித் துன்பப்படுத்தினார்கள்.

இவ்வுலகத்தை இவர்கள் மற்றொரு உலகத்தின் தலைவாயிலாகவும், மற்றொரு உலகத்திற்கு மக்களை அனுப்பும் பள்ளிக்கூடமாகவும் மற்றொரு உலகத்தின் சோதனை நிலையமாகவும் கருதினார்கள். மற்றொரு வாழ்க்கைக்காக இவ் வாழ்க்கையை வெறுக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தினார்கள். இவ்வுலகத்தில் ஞானிகளைப் பணிந்து அவர்கள் சொற்படி நடப்பவர்கள் அடுத்த உலகத்தில் அழியாத வாழ்வை அடைவார்களென்றும், மற்றவர்கள் நரகத்தை அடைவார்களென்றும் சொன்னார்கள்.

இத்தகைய ஞானிகள் உழைப்பை வெறுத்தார்கள்; உலகத்துக்காக அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் பிறருடைய உழைப்பால்—பிச்சை எடுத்து ஜீவித்தார்கள். மாசற்ற இன்ப சுகத்தையும் இரக்கமுள்ள அன்பையும் அவர்கள் வெறுத்தார்கள்.

இந்த ஞானிகள் தனியான கல்வியை விருத்தி செய்தார்கள். தெய்வீகம் பொருந்திய புராணங்களை எழுதினார்கள். அவைகள் கடவுளையும் தேவதைகளையும் பற்றி பக்கம் பக்கமாய் வர்ணிக்கின்றன. உலகத்தின் தோற்றத்தைப்பற்றியும் மனிதனின் உற்பத்தியைப்பற்றியும் அவைகள் சொல்லுகின்றன; மதிக்கத்தக்கவை அதில் ஒன்றுமில்லை. கோடிக்கணக்கான மனிதர்கள் இந்தப் பொருளற்ற புத்தகங்களை வாசித்துத் தங்கள் வாழ்நாளையெல்லாம் வீணாக்கினார்கள்.

ஞானிகளெல்லாம் அவர்களுடைய புத்தகங்களெல்லாம் கடவுளால் எழுதப்பட்டதென்றும், அதன்படி மனிதர்கள் நடக்காவிட்டால் நரகத்தை அடைவார்களென்றும் சொன்னார்கள். இருந்தபோதிலும் உலகப்பற்றுள்ளவர்களும் 'கொரோமானவர்'களும் 'இறைவனருள்' இல்லாதாரும் 'தெய்வீகம்' பொருந்தியபுத்தகங்களை விடஅருமையான காவியங்களைச் செய்தார்கள். உலகத்திலுள்ள வேத புராண இதிகாசங்க

னெல்லாம் ஷேக்ஸ்பியரின் மூளைக்கு—அறிவுக்கு ஒரு சிறிதும் ஒப்பாகாது.

அமெரிக்காவில் விடுத்த சுதந்திர அறிக்கையானது வேத புத்தகங்களை விட மிகவும் மேலானது.

ஞானிகள் நயத்தாலும், பயத்தாலும் இவ்வுலகத்தைச் சீர்திருத்த முயன்றார்கள். அவர்கள் மதத்தின் பேரால் சகோதரர்களை துன்புறுத்தும்படி மனிதர்களுக்குச்சொல்லிக் கொடுத்தார்கள். அவர்கள் கத்தியை உபயோகப்படுத்தினார்கள். எப்பொழுதும் அவர்கள் அக்கிரமத்தைக் கையாண்டார்கள். கடவுளின் தயவு தங்களுக்கிருப்பதாக அவர்கள் நடித்தார்கள். தங்களுடைய பிரார்த்தனை மழையையும் சூரிய வெளிச்சத்தையும் தருவதாக அவர்கள் சொன்னார்கள். அட்டை போல அவர்கள் தொழிலாளர்களின் உழைப்பைக் கொள்ளை கொண்டு போனார்கள். அவர்கள் இரக்கம் காட்டவேண்டுமென்று இறைவனை வேண்டினார்கள். ஆனால் அவர்கள் இரக்கமில்லாமலிருந்தார்கள். அவர்கள் பழிக்குப் பழிவாங்குவதை வெறுத்தார்கள்; ஆனால் அவர்கள் ஒருவரையும் மன்னிக்கவில்லை.

'ஞானி'களுக்குப் பலம் இருக்கும் பொழுது வித்தைகளெல்லாம் அழிந்து ஒழிந்தன; கல்விமறைந்து போயிற்று; ஆராய்ச்சி வெறுக்கப்பட்டது; சுதந்திரம் அழிக்கப்பட்டது. அறிவாளிகளெல்லாம் சிறையிலடைக்கப் பட்டார்கள்; யோக்கியமானவர்களும் குணசீலர்களும் தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டார்கள். உண்மை உரைத்த தைரியவான்களும் சுத்த வீரர்களும் கொலை செய்யப்பட்டார்கள். ஞானிகள் எப்பொழுதும் ஜன சமூகத்துக்கே பெரிதும் விரோதியாயிருக்கிறார்கள்.

நாம் சுகமாகவிருப்பது யாரால்? நாம் முன்னேற்றமடைவது யாரால்? நாம் அதிக நாள் ஜீவித்திருப்பது யாரால்? நாம் பிணியைப்போக்கிக் கொள்வது யாரால்? துன்பத்தைத் போக்கிக்கொள்வது யாரால்? நாம் நல்ல ஆடை அணிந்து விருந்து உண்டு மாளிகையில் வாழ்வது யாரால்? உள்ளத்தைக் கவரும் சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமுறுவது யாரால்? சிறந்த கவிகளைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்வது யாரின் உதவியால்? ஜன

சமூகத்துக்கெனவிருக்கும் கோடிக்கணக்கான இயந்திரங்கள், ஜன சமூகத்துக்கு நன்மையைச் செய்து வரும் இயந்திரங்கள் யாரால் கண்டுபிடிக்கப் பட்டன? இவைகளெல்லாம் ஞானிகளால் ஆயினவையல்ல. உலகப்பற்றுள்ளவர்களாலும் உலக வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாலுமே உலகத்துக்கு இவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு நான் எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகின்றேன். இத்தகையோர்களாலேயே நாம் சுகமாக வாழ்ந்து வருகிறோம்.

இந்த மதங்களும் புராண இதிகாசங்களும், சங்கராச்சாரியார் போன்ற மதக்குருக்களும் இயற்கையாய் உண்டாக்கப்பட்டவர்கள். ஒரு காலத்தில் அநாகரீகமாயிருந்தவர்கள் மெள்ள மெள்ள முன்னேற்றமடைந்து இப்பொழுது நாகரீகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். உலக சரித்திரத்தில் தெய்வீகமானதும் தற்செயலானதும் ஒன்றுமில்லை. ஒவ்வொன்றும் இயற்கையாகவே நிகழ்ந்திருக்கிறது.

குரூரமானவர்களையும் வஞ்சகர்களையும் நாம் குற்றஞ் சொல்ல வேண்டாம்; அவர்கள் கெட்ட எண்ணங்களை எண்ணும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள்; ஆதலின் அவர்கள் கெட்ட எண்ணங்களை எண்ணினார்கள். கெட்ட எண்ணம் எண்ணியதால் அவர்கள் கெட்ட காரியங்களைச் செய்யவேண்டியவர்களானார்கள்- ஆதலின் அவர்கள் கெட்ட காரியங்களைச் செய்தார்கள்.

அதிசய காலமாக மனிதன் உலகத் தோற்றத்தின் காரணத்தை நிர்ணயிக்க முயன்றான்; தன்னால் இயன்றவரை அவன் கஷ்டப்பட்டான். தண்ணீர் ஓடுவதையும், மரங்கள் வளர்வதையும், மேகங்கள் ஆகாயத்தில் சஞ்சரிப்பதையும், நக்ஷத்திரங்கள் வானத்தில் பிரகாசிப்பதையும், சந்திரனுடைய தண்மையான பிரகாசத்தையும் பார்த்து அவன் அளவிலா ஆச்சரியங்கொண்டான். இறப்பையும் பிறப்பையுங் கண்டு அவன் சஞ்சலமடைந்தான். கடலையும் எரிமலையும் இடிமின்னலையும் பூகம்பத்தையும் புயற்காற்றையும் பார்க்கும்பொழுது அவன் பயமடைந்தான். உலக வாழ்க்கைக்கு அப்புறம் உலகத்தை அன்பாலும் வெறுப்பாலும் ஆளும்படியான கடவுளை அவன் சிருஷ்டி செய்தான். காரண காரியங்கள் அவனுக்குக் கடவுளாகத் தோன்றின. சூரி

யன் போர்வீரனாகத் தோன்றினான். இரவு கொடிய பாம்பாகத் தோன்றியது. மெல்லிய காற்று இனிய பாடகனாகத் தோன்றிற்று.

புராணங்களை எழுதியவர்கள் கவிஞர்கள். கண்ணிற் பட்டவைகளுக்கெல்லாம் காரணம் சொல்லியவர்கள் அவர்களே. ஆனால் ஜன சமூகமோ அவர்களது அழகிய கற்பனைகளை உண்மையென நம்பியது. பல்வேறு தேசங்களில் எழுதப்பட்ட புராண இதிகாசங்கள் உலகத்தை ஆள ஆரம்பித்தன. ஆதலின் நமது முன்னோர்கள் பழைய காலங்களில் கடவுள் மனிதர்களின் கோரிக்கையைப் பூர்த்தி செய்தார் என்று நம்பினார்கள்.

நமது முன்னோர்கள் நரகத்தை நம்பினார்கள். கடற்கரையில் கிளிஞ்சல்கள் கிடப்பதையும் அலை இடைவிடாது நிலத்தை நோக்கி ஓடிவருவதையும் கண்ட அவர்கள் கடவுள் கோபங்கொண்டு சில மனிதர்களை வெள்ளத்தால் அழித்து விட்டார் என்றும், புண்ணியம் செய்தவர்களை அவர் பூமியில் கொண்டுவந்துவிட்டுக் காப்பாற்றினார்கள் என்றும் நம்பினார்கள். இந்துக்கள் சொல்வதென்னவென்றால், முற்காலத்தில் மனு என்ற பெரியார் கங்கையில் தண்ணீர் மொண்டு வந்தார்; பாத்திரத்தில் ஒரு மீன் காணப்பட்டது. அந்த மீன் மனுவை தன்னை தண்ணீரில் விட்டுவிடும்படி வேண்டிக் கொண்டது. அதன் வேண்டுகோளுக்கிணங்கிய மனு அதை கங்கையில் விட்டுவிட்டார். அந்த மீன் மறுபடியும் அவரை நோக்கி ஒரு பெரிய வெள்ளம் வரப்போகிறதென்றும் அப்பொழுது உயிர் தப்புவதற்காக ஒரு படகுகட்டி அதில் அவருக்கு வேண்டிய ஆடுமாடுகளை ஏற்றிக்கொண்டு உயிர் பிழைக்கும்படி சொல்லி வெள்ளத்தில் தான் வந்து காப்பாற்றுவதாக உறுதி கூறி மறைந்தது. ரிஷியாகிய மனு சொல்லிய வண்ணம் செய்தார். வெள்ளம் வந்தது. மீனும் மறுபடியும் தோன்றியது. அப்பொழுது அந்த மீன் ஒரு பெரிய திமிங்கலம் போலிருந்தது. மனு படகிலிருந்த ஒரு கயிற்றை மீன் வாயிலுள்ள முள்ளில் கட்ட அந்த மீன் அந்தப் படகை இழுத்துக்கொண்டுபோய் ஒரு மலையில் சேர்க்க, மனு அந்த மலையில் வெள்ளம் வடியும் வரையில் தங்கியிருந்தார். இந்த ஆச்சரியமான மீனின் பெயர் "மத்சயா"

ஒவ்வொரு தேசமும் இதுபோன்ற கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இத்தகைய இதிகாசங்கள் பிறப்பு

இறப்பு முதலியவைகளின் தத்துவத்தை விளக்க முயன்றன; துன்பத்தையும் விளக்க அவைகள் முயன்றன; சுக துக்கங்களால் அவைகள் உலகத்தை அலங்கரிக்க முயன்றன; கடவுள்களுக்கு மனிதர்களுக்குள்ள குணங்கள் இருக்கிறதென்றுநிலைநாட்ட அவைகள் முற்பட்டன. புராணங்களில் பார்த்தவிடமெல்லாம் பிசாசுகள், சென்றவிடமெல்லாம் தேவதைகள்; இருட்டில் கடவுள்; வெளிச்சத்தில் கடவுள்; மரத்தில் கடவுள்.

இத்தகைய புராண இதிகாசங்கள் கொள்கையில்—தத்துவத்தில்—பொய்யானதாயிருந்தாலும் கற்பனா சக்தியிலும் இனிய நடையிலும் மிக அழகாக விருக்கின்றன. ஆனால் அழகைக்கொண்டு ஆபாசத்தைத் தள்ளுபவர்கள் உலகில் மிகமிக சொற்பம்.

முதன் முதல் மனிதர்கள் சூரியனை வணங்கினார்கள். இதை விட இயற்கையானதொன்றுமில்லை. ஒளியே உயிர்; உஷ்ணமே அன்பு; சூரியனே உலகத்துக்கு உயிரைக் கொடுப்பவர். இரவில் தோன்றும் வீரர்களை சூரியன் எதிர்த்துப் போராடுகிறார். கிருஷ்ணன் சூரியனாகவிருந்தார்; அவர் பிறக்கும்பொழுது கங்கை நீர் பெருகி ஓட ஆரம்பித்தது. பட்டுப்போன மரங்களெல்லாம் உயிர்பெற்று [illegible] ஆரம்பித்தன.

நமது கடவுளுக்குத் தகப்பனார்கள் உண்டு. ஆனால் கடவுள்களின் தாய்மார்கள் கன்னிகைகள், அவர்களின் பிறப்பு கட்சத்திரங்களால் அறியப்படும்.

கிருஷ்ணன் குகையில் பிறந்ததினால் அவர் இடையர்களால் காப்பாற்றப்பட்டார். சிலருடைய கொள்கைப்படி புத்தர் ஒரு மரத்தின் கீழ் பிறந்தார். நாயகர்களெல்லாம் நமது கடவுள்கள் குழந்தைகளாக விருக்கையில் அவர்களை அழிக்க முயன்றார்கள்.

ஒவ்வொரு மதமும் முதலில் சூரியனை வணங்கி வந்தது. இப்பொழுதும் குருக்கள் வணங்கும்பொழுது கண்ணை மூடிக்கொள்ளுகிறார்கள். இதிலிருந்து முன் ஒரு காலத்தில் சூரிய வணக்கம் இருந்திருக்கிறதென்று தோன்றுகிறது. ஏனெனில் சூரியனை வணங்கும்பொழுது கண்ணை மூடிக்கொள்வது வழக்கம். இதே வழக்கம் இன்றும் இருந்து

வருகிறது. நமது மதத்தில் புதுமையான தொன்றுமில்லை அதன் கொள்கைகளும் தத்துவங்களும் முற்காலங்களில் இருந்தவைகளே.

தெய்வீகமானதும் ஆச்சரியமானதுமான காரியங்கள் முற்காலத்தில் நடந்திருக்கவேண்டும். நீ ஒரு மனிதனிடம் சென்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இறந்தவர்களெல்லாம் உயிர் பெற்று எழுந்தார்களென்றால் அவன் "ஆம் எனக்கு அது தெரியும்" என்பான். பிறகும் நீ இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின்பு இறந்தவர்களெல்லாம் எழுந்து விடுவார்கள் என்றால் அவன் "ஆம் ஒருகால் எழுந்து விடலாம்" என்பான். ஆனால் நீ இப்பொழுது இறந்த மனிதன் ஒருவன் உயிர் பெற்று எழுந்தான் என்றால் அவன் உடனே "நீ எந்தப் பைத்தியகார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்தாய்?" என்று கேட்பான்.

வேதங்களில் தெய்வீகம் பொருந்திய செயல்கள் பலவிருக்கின்றன. ஆனால் அவைகள் உண்மையை உணர்த்தவில்லை.

இதை ஒருவாறு விளக்கலாம். தெய்வீகமான காரியங்கள் ஒன்றும் நிகழவில்லை. காலக்கிரமத்தில் தோன்றிய கற்பனைக்கதைகளே புராணங்களாகும். அக்காலத்தில் உலகத்தில் அறியாமையும் அச்சமும் நிறைந்திருந்தது. ஆதலின் தெய்வீகமான காரியங்கள் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து கொண்டிருந்தன. எல்லாம் இயற்கைக்கு மேம்பட்டவைகளே. கடவுள்கள் அடிக்கடி உலக விஷயங்களில் வந்து கலந்து கொண்டார். உண்மையல்லாதவைகளெல்லாம் உரைக்கப்பட்டன. ஆதாரமற்றவைகளெல்லாம் நம்பப்பட்டன. சரித்திரங்களிலெல்லாம் ஆதாரமற்றவைகளே அதிகமாக நிறைந்திருந்தன. பேயும் பிசாசும் கணக்கில்லாமலிருந்தன. இறந்தவர்களுடைய எலும்புகள் உயிருடனிருப்பவர்களின் கோயை குணமாக்கியது. ஆதலின் அக்காலத்தில் இறந்தவர்களே வைத்தியர்கள்; சவச்சாலையே ஆஸ்பத்திரி!

நமது முன்னோர்கள் உலகிலுள்ள எல்லாம் மனிதர்களுக்காகப் படைக்கப்பட்டன வென்றும், கடவுள் உலகத்தைப் பாதுகாக்கின்றார் என்றும் நம்பினார்கள். அவர்கள் மனிதர்கள் கடவுளுக்கு அடிமையென்றும் அவரது கோபத்துக்கு

கல்யாண விதிதலை.

(சு. வெ. ரா)

ஆண் பெண் கல்பாண விஷயத்தில் அதாவது புருஷன் பெண்ஜாதி என்ற வாழ்க்கையானது நாது நாட்டில் உள்ள தொடுனையைப் போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நாது கல்யானை தத்துவம் எல்லாம் சுருக்கமாகப் பார்த்தால் பெண்களை ஆண்கள் அடிமையாகக்கொள்ளுவது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே அதில் இல்லை. அவ்வடிமைத் தனத்தை நிறுத்து பெண்களை எதாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு அவ்விதக் கல்பானத்திற்கு தெய்வீகக்கல்பானம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்து பெண்களை வஞ்சிக்கின்றோம்.

பொதுவாக கவனித்தால் நாது நாடுமாத்திரமல்லாமல் உலகத்திலேயே அதேகமாய்க் கல்பானை விஷயத்தில் பெண்கள்

ஆளாகும் வேலைக்காரனென்றும் நம்பினார்கள். உலகத்தைப் படைத்த கடவுள் பிரார்த்தனைகளுக்கும் செவி சாய்த்து பலனை அளிக்கிறார் என்றும் நமது முன்னோர்கள் நம்பினார்கள். இது ஒரு பெரிய தவறாகும். கணக்கில்லாத கோவில்கள் கட்டப்பட்டன. தினந்தோறும் பூசைகள் இடைவிடாது நடக்கின்றன; கோடிக்கணக்கானவர்கள் வந்து கும்பிடுகின்றார்கள்; முடிவில் பலன் ஒன்றுமில்லை. பிரார்த்தனைகளுக்குப் பதிலைக் காணோம்; வருந்தி அழைத்த கடவுள் வரக்காணோம். மனிதர்களுக்காக ஒன்றும் புதிதாக உண்டாக்கப்படவில்லை; விண்ணுலகத்தினின்றும் உதவி புதிதாக வரவில்லை; கும்பிட்ட கையே உணவிற்காக உழைக்கின்றது. கோவிலில் விழுந்து கும்பிட்ட உலகு அன்னத்திற்காக அங்குமிங்கும் அலைகிறது; கடவுளை உள்ளன்புடன் வேண்டிய மனிதன் தன்னைக்காப்பாற்ற முடியாமல் இறந்து போகிறான்.

மிக்க கொடுமையும், இயற்கைக்கு விரோதமான நிர்ப்பந்தமும் படுத்தப்படுகிறார்கள் என்பதை நடுநிலையை யுள்ள எவரும் மறுக்க முடியாது. ஆனால் நமது நாடோ இவ்விஷயத்தில் மற்ற எல்லா நாட்டையும்விட மிக்க மோசமாகவே இருந்து வருகிறது.

இக்கொடுமைகள் இனியும் இப்படியே நிலைபெற்று வருமானால் சமீபகாலத்திற்குள்ளாக அதாவது ஒரு அரை நூற்றாண்டுகளுக்குள்ளாக கல்யாணச் சடங்கும், சொந்தமும் உலகத்தில் அநேகமாய் மறைந்தே போகும் என்பதை உறுதியாய்ச் சொல்லலாம். இதை அறிந்தே மற்ற நாடுகளில் அறிஞர்கள் பெண்கள் கொடுமையை நாளுக்கு நாள் களைத்திக்கொண்டு வருகின்றார்கள். நம் நாடு மாத்திரம் குரங்குப்பிடியாய் பழய கருப்பனாகவே இருந்து வருகின்றது. ஆதலால் தலைகீழ் முறையான பெண்கள் விளர்ச்சி ஒன்று நமது நாட்டில் தான் அவசரமாய் ஏற்பட வேண்டியிருக்கின்றது.

செங்கல்பட்டில் கூடிய மகாநாட்டில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் தங்கள் தங்கள் கல்யாண விடுதலை செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் செய்யப்பட்டதையும் சென்னையில் கூடிய பெண்கள் மகாநாட்டில் கல்யாண ரத்துக்கு ஒரு சட்டம் வேண்டும் என்று தீர்மானித்த உடனும் உலகமே முழுகிவிட்டதாக சீர்திருத்த வாதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்பவர்கள் உட்பட பலர் கூக்குரலிட்டார்கள். ஆனால் செங்கல்பட்டு தீர்மானத்திற்குப் பிறகு வெளிநாட்டிலும், இந்தியாவிலும் பலவிடங்களில் கல்யாண ரத்துச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவில் கல்யாணமே தினசரி ஒப்பந்தம்போல் பாவிக்கப்பட்டு வருகிறது. ஜர்மனியில் புருஷனுக்கும், பெண்ஜாதிக்கும் இஷ்டமில்லையானால் உடனே காரணம் சொல்லாமலே கல்யாணத்தை ரத்துசெய்துகொள்ளலாம் என்பதாக சட்டம் கொண்டுவரப்பட்டது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். சமீபத்தில் பரோடா அரசாங்கத்தாரும் கல்யாண ரத்துக்குச்சட்ட சபையில் சட்டம் நிறைவேற்றி விட்டார்கள். மற்ற மேல்நாடுகளிலும் இவ்விதச்சட்டங்கள் இருந்து வருகின்றன. நமது நாட்டில் மாத்திரம் இவ்விஷயம் சட்டம் செய்வதில் கவனிக்கப்படாமலிருந்து வருகின்றதானது மிகவும் அறிவீனமான காரியம் என்றே சொல்லவேண்டும். சாதாரணமாக தென்னாட்டில் பத்திரிகைகள் மூலம் அனேக புருஷர்கள் தங்களது பெண்ஜாதி

களின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டு கொலை கள் செய்ததாக தினம் தினமும் செய்திகள் வெளியாவதைப் பார்த்து வருகின்றோம்.

சில சமயங்களில் ஒரு பெண்ஜாதியின் நடவடிக்கை சந்தே கத்திற்கு பல கொலைகள் நடந்ததாகவும் பார்க்கின்றோம். தெய்வீக சம்மதமான கல்யாணங்கள் இப்படி முடிவடைவதா னேன் என்பதைப்பற்றி தெய்வீகத்தில் பிடிவாதமுள்ள எவருக் குமே போதிக்கப் புத்தியில்லை. பெண்கள் உலகம் முன்னேற் றமடைய வேண்டுமானால், அவர்களுக்கும் மனிதத்தன்மை ஏற்பட வேண்டுமானால் ஆண்களுக்கும் திருப்தியும், இன்பமும், உண்மையான காதலும், ஒழுக்கமும் ஏற்பட வேண்டுமானால் கல்யாண ரத்துக்கு இடம் அளிக்கப்பட வேண்டியது முக்கிய மான காரியமாகும். அப்படிக்கில்லாதவரை ஆண், பெண் இரு வருக்கும் சுகந்திர வாழ்க்கைக்கு இடமே இல்லாமல் போய் விடும்.

நமது "சீர்திருத்தவாதிகள்" பலர், ஒரு மனிதன் இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக்கொள்வதைப்பற்றி மாத்திரம் குடி முழுகிப்போய்விட்டதாகக் கூச்சல் போடுகின்றார்கள். இவர் கள் எதை உத்தேசித்து இப்படிக் கூச்சல் போடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. மதத்தை உத்தேசித்தா? அல்லது பகுத்தறிவை உத்தேசித்தா? அல்லது பெண்கள் நலத்தை உத்தேசித்தா? அல்லது மனித சுதந்திரத்தை உத்தே சித்தா? என்பது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை. அல்லது மனித ஒழுக்கத்தை உத்தேசித்து இப்படிப் பேசுகின்றார்களா என்பதும் விளங்கவில்லை.

நிற்க, ஒரு பெண்ஜாதிக்கு மேல் மனிதன் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது என்று சொல்லுபவர்களை நாம் ஒன்று கேட்கின்றோம். அதென்னவெனில், கல்யாணம் என் பது மனிதன் இன்பத்துக்கும், திருப்திக்குமா? அல்லது சடங் குக்காகவா? என்று கேட்பதோடு இஷ்டமில்லாத, ஒற்றுமைக்கு இசையாத, கலவிக்கு உதவாத ஒரு பெண் எந்தக் காரணத்தி னாலோ ஒருவனுக்குப் பெண்ஜாதியாக நேர்ந்துவிட்டால் அப் போது புருஷனுடைய கடமை என்ன என்று கேட்கின்றோம். அதுபோலவே ஒரு பெண்ணுக்கும் அப்படிப்பட்ட ஒரு புருஷன் அமைந்துவிட்டால் அப் பெண்ணின் கதி என்ன என்றுதான் கேட்கின்றோம். கல்யாணம் என்பது தெய்வீகமாகவோ,

பிரிக்க முடியாததாகவோ உள்ளபடியில் இருக்குமாயின் அதில் இவ்வித குணங்கள் ஏற்பட முடியுமா? என்பதை யோசித்தாலே தெய்வீகம் என்பது முழுப் புரட்டு என்பது எப்படிப்பட்ட மனிதனுக்கும் புரியாமல் போகாது. ஆகவே நமது நாட்டிலும் மற்ற நாடுகளில் இருப்பதுபோன்ற கல்யாண ரத்துக்குச் சட்டம் சமீபத்தில் ஏற்படாமல்போகுமாயின் கல்யாண மறுப்புப் பிரசாரமும் கல்யாண ஆனபுருஷர்களுக்கும் பெண்களுக்கும் பலதாரப் பிரசாரமும்தான் செய்யவேண்டி வரும். அன்றியும் இது சமயம் ஒற்றுமைக்கும், திருப்திக்கும் இன்பத்திற்கும் உதவாத பெண்களை உடைய புருஷர்கள் கண்டிப்பாக தைரியமாக முன் வந்து தங்களுக்கு இஷ்டமான பெண்களை திருமபவும் மணம் செய்துகொள்ளத் துணியவேண்டும் என்றும் தூண்டு கின்றோம். எனெனில் அப்படி ஏற்பட்டால் தான் தெய்வீகம் என்கின்ற பெயரைச் சொல்லிக்கொண்டு புருஷர்களுக்கும், பெண்களுக்கும் சம்மதமும் முன் பின் அறிமுகமும் இல்லாமல் செய்யப்பட்டுவரும் கல்யாணங்களில் மக்கள் அடையும் துன்பம் ஒழிபட முடியும். மனிதன் ஏன் பிறந்தானோ ஏன் சாகிறானோ என்பது வேறு விஷயம். ஆகலால் அது ஒரு புறமிருந்தாலும் மனிதன் இருக்கும்வரை அனுபவிக்க வேண்டியது இன்பமும் திருப்தியுமாகும். இதற்கு ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் முக்கிய சாதனம்.

அப்படிப்பட்ட சாதனத்தில் இப்படிப்பட்ட துன்பத்திற்கிடமான இடையூறு இருக்குமானால் அதை முதலில் களைந்தெறிய வேண்டியது ஞானமுள்ள மனிதனின் கடமையாகும். மனித ஜீவகோடிகளின் திருப்திக்கும், இன்பத்திற்கும் வேலை செய்பவர்கள் இதையே செய்ய வேண்டும். அப்படிக்கில்லாமல் "ஏதோ கல்யாணம் என்பதாகச்செய்து கொண்டோமே, செய்தாய் விட்டதே, எப்படி இருந்தாலும் சகித்துக்கொண்டுதானே இருக்க வேண்டும்" என்று கருதி துன்பத்தையும், அதிருப்தியையும் அனுபவித்துக்கொண்டிருப்பதும், அனுபவித்துக்கொண்டிருக்கச் செய்வதும், மனிதத்தன்மையும், சுயமரியாதையும் அற்ற தன்மையுமேயாகும் என்பதே நமதபிப்பிராயமாகும்.

முக்கிய கவனிப்பு:

"குடி அரசு" (வாரப்பதிப்பு)

"பகுத்தறிவு" (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,
மத இயல் புரட்டு,
பொருளியல் புரட்டு,
சமுதாய இயல் புரட்டு,
தேசீய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுயநலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல "தலைவர்கள்", மதாச்சாரியார்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் ஏன்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்.

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3-0-0
பகுத்தறிவுக்கு ,, ரூ: 1-0-0
இரண்டு பத்திரிகைக்கும் சேர்த்து

வருட சந்தா ரூ 3—8—0

விலாசம்:—மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)◓(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரசிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன?	...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	...	,,	0 3 0
ஸால்வேடர் ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0	6 0
ஷை	2-ம் பாகம்	0	5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0	4 0
ஷை	2-ம் பாகம்	0	4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”)	...	,,	0 5 0
ஷை	காலிக்கோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5	உழைப்பாளிகளுக்குரல இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேலோக கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்களும் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பன்னாட்டுஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	கத்தேர்லிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
25.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
29.	புதுரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30	புராண் ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
34.	நரகம் எங்கே?	0	2	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.